Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

இன்று

(C/1245)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 தை 06 வெள்ளிக்கிழமை (20.01.2012) பக்கங்கள் 16 ஓசை – III



இவருக்கு அடித்தால் பரிசு

12



அடிச்சா தாங்க மாட்டீங்க!

13

இதுவும் இறக்குமதி



14



வானம் பார்த்த பூமி

06

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காண 'செனட் சபை' அமைக்க முடிவு



(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையிலும் மாகாண சபைகளுக்கும் மத்திய அரசுக்கும் இடையில் நிர்வாக ரீதியில் இணக்கப்பாடும் புரிந்துணர்வும் நிலவக்கூடிய வகையிலும் செனற் சபை அமைக்கும் திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தவுள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பாக எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார். அமைச்சர் மேலும் கூறியதாவது,

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையிலேயே செனற் சபையை (15 ஆம் பக்கம் பார்க்க)

## கிருஷ்ணா நாடு திரும்பினார்

(கொழும்பு)

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நேற்று நண்பகல் 1.35 மணியளவில் இந்திய விசேட விமானத்தின் மூலம் இந்தியா திரும்பினார்.

இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், எதிர்க் கட்சியினர் உட்பட பலரை சந்தித்தார்.

அத்துடன் இலங்கையுடன் ஐந்து உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில் பொறியியல் பீடம் அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை கிளிநொச்சியில் அமைக்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்த அமைச்சரவை பத்திரத்தை உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க சமர்பித்திருந்தார். இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது, தமிழ் மாணவர்களின் (15 ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் மேற்கு கடற்பகுதி ஊடாக யாழில் குவியும் போதைப் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியாவிலிருந்து யாழ். வலிகாமம் மேற்கு கடற்பகுதியூடாக கடலட்டைகள் மற்றும் போதைப்பொருள் என்பன தொடர்ந்தும் கடத்தப்படுவதாக யாழ். கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பல கடத்தல் சம்பவங்கள் கடற்படையினரால் பிடிக்கப்பட்டிருப்பதாக அவர் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்தியாவில் கடலட்டை பிடிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டிருப்பதாகவும், இலங்கையில் அவ்வாறு தடைவிதிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இந்தியாவில் பிடிக்கப்படும் கடலட்டைகள் பதப்படுத்தப்பட்டு இலங்கையின் வடபகுதியூடாக கடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம் கடத்தல்காரர்கள் பெருமளவு பணம் சம்பாதித்து வருவதாகவும், இதன்போது போதைப் பொருட்களும் அவ்வாறு (15 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய போஷாக்கு நிகழ்ச்சித் திட்டம் வல்வெட்டித்துறையில் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள தேசிய போஷாக்கு நிகழ்ச்சித் திட்டத்தை நேற்று வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயத்தில் கல்வி அமைச்சரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இங்கு உரையாற்றிய அமைச்சர் பந்துல குணவர்தன,

பருத்தித்துறை முதல் தேவேந்திரமுனை வரையான நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள தேசிய போஷாக்கு



நிகழ்ச்சித் திட்டத்தை வல்வெட்டித்துறையில் தொடக்கி வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இத்திட்டத்தினூடாக பாடசாலைக் கல்வியோடு இணைந்த உடல், உள ரீதியில் வளர்ச்சியடைந்த ஆரோக்கியமான (15 ஆம் பக்கம் பார்க்க)

## அப்துல் கலாம் இலங்கையில்

(கொழும்பு)

அப்துல் கலாம் இன்று மாலை இலங்கை வருகின்றார். நாளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும் மும்மொழி செயற்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளார்.

அதேவேளை அன்றைய தினம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாணவர்களைச் சந்தித்து (15 ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி அபிவிருத்திக்கு 100 கோடி இலங்கைக்கு இந்தியா உதவி

(கொழும்பு)

இலங்கையில் கல்வி அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக இந்திய அரசாங்கம். 100 கோடி ரூபாவை வழங்கவுள்ளது என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்தார். இந்திய உதவியுடன் கட்டி முடிக்கப்பட்ட காலி - ஹிக்கடுவ இடையிலான புகையிரதப் பாதையை நேற்று திறந்துவைத்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாணவர்களுக்கான கல்விக் கட்டணம், புத்தகக் கட்டணம், தங்குவதற்கான கட்டணம், மாதாந்த சம்பளம் உள்ளிட்ட தேவைகளுக்கு இந்த உதவித்தொகை 3 ஆண்டுகளுக்கு (15 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வர்த்தகக் கண்காட்சி இன்று கோலாகல ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

யாழ். வர்த்தகக் கண்காட்சி இன்று துரையப்பா விளையாட்டரங்கில் கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

இந்த வர்த்தகக் கண்காட்சிக்கான சகல ஏற்பாடுகளும் நேற்றிரவுடன் பூர்த்தியடைந்திருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இலங்கைக் கண்காட்சிகள் மற்றும் மாநாடுகள் சேவைகள் நிறுவனம் மற்றும் யாழ்ப்பாண வர்த்தக தொழிற்துறை மன்றம் ஆகியன இணைந்து மூன்றாவது தடவையாக யாழ்.நகரில் நடத்தவுள்ள இந்த வர்த்தகக் கண்காட்சியில் இம்முறை 300 இற்கும் அதிகமான வர்த்தக, தொழிற்துறை (15 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் நீதிபதிகள் மீது சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

ஓய்வு பெற்ற நீதிபதிகள் மீது சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. கொழும்பு குற்ற விசாரணை பிரிவினர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

நீதி அமைச்சினால் வழங்கப்பட்ட மூன்று வாகனங்களை நீதிபதிகள் மூவர் திருப்பி ஒப்படைக்கவில்லை எனத் தெரிவித்து நீதி அமைச்சு தாக்கல் செய்துள்ள வழக்கின்படியே இந்த விசாரணைகளும், சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாக குற்ற விசாரணைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நீதிபதிகளான கரலியத்த குணதிலக, ஆர்.ரி.விக்னராஜா (15 ஆம் பக்கம் பார்க்க)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உதவி



(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் இயங்கும் முன்பள்ளிகளின் அபிவிருத்தியில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் அதிக அக்கறை எடுத்துப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். குழந்தைகளைக் கையாளும் முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் போதிய வருமானம் கிடைப்பதில்லை. இவ்வாறான நிலையிலும் முன்பள்ளி ஆசிரியர்கள் தங்களின் நிறைவான சேவையை வழங்கிவருகின்றனர். அவர்களின் சேவையை ஊக்கப்படுத்தும் வகையில் பல்வேறு உதவித் திட்டங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் முன்பள்ளி ஆசிரியைகளுக்கான உதவி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் சங்க இணைப்பாளர் செல்வராஜா தலைமையில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), யாழ் மாநகரசபை உறுப்பினர் துரைராசா இளங்கோ (றீகன்) ஆகியோர் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சேலைகள் வழங்கி வைத்தனர். இதன்போது யாழ். வலய முன்பள்ளி ஆசிரியர்கள் 377 பேருக்கு இவ் உதவி வழங்கிவைக்கப் பட்டுள்ளது.



பசுக்கள் இடபங்கள் பாதுகாப்பு இணையத்தில் நடாத்தப்பட்ட பட்டிப் பொங்கல் விழாவில் கலந்துகொண்ட நல்லை குருமகாசன்னிதானம் சுவாமிகள், சின்மயாமிஷன் சுவாமிகள் யாக்ரத்சைத்தன்யா, சைவக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ க. கிருபானந்தக்குருக்கள் 'கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சார்பில் கௌரவ சில்வெஸ்ரர் அலென்ரன (உதயன்)' யாழ். பல்கலைக்கழக. இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மு. வேதநாதன், வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் தயானந்தன் ஆகியோர் விழாவில் அமர்ந்திருக்கின்றனர்.



சுண்டுக்குளி மகளீர் கல்லூரியில் நேற்று கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற கால்கோள் விழா நிகழ்வில் மாணவர்கள் அழைத்து வரப்பட்டபோது...


# பாராட்டி வாழ்த்துகிறோம்







வெடியரசன் வீதி, காரைநகரில் உள்ள எமது கங்கைமதி சனசமூக நிலையத்திற்கு கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஆலோசனைக்கு இணங்க ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். அமைப்பாளர் தோழர் கமல் அவர்களின் அயராத முயற்சியால் பன்முகப் படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒரு இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக இவர்களுக்கும், இந்த நிதி உதவியை நாம் பெறுவதற்கு எம்முடன் தோளோடு தோள் கொடுத்து உதவிய எமது காரைநகர் அமைப்பாளரும் பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவருமான தோழர் ரஜனி (கண்ணன்) அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கங்கைமதி சனசமூக நிலையம்
வெடியரசன் வீதி, காரைநகர்.

(C/1530)


# விசேட கூட்டம்

37 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியின் முன்னோடியாகப் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான போட்டிகள் பங்குனி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் நடாத்தி முடிக்கப்பட வேண்டுமென விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் அறிவித்துள்ளது. அதற்கு இணங்க மேற்படி போட்டிகளை நடாத்துவதற்கு ஏதுவாக யாழ்ப்பாணப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்கள் தங்கள் கழகப் பதிவை உறுதிப்படுத்த கழகத்தின் புதிய ஆண்டுப் பொதுக்கூட்ட அறிக்கையுடன் இன்று மாலை3.30 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று யாழ். பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கபபுளியடி, யாழ்ப்பாணம். Tel:- 021 222 8680, 0775925088 (C/1186)




(C/1242)

**ஆற்றலைப் பெறவேண்டுமானால், மனதில் எப்போதும் ஆற்றலைப் பற்றிய எண்ணமே இருக்கவேண்டும் எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும், ஆற்றல்பற்றியே சிந்தித்துக்கொண்டிருக்கவேண்டும்.**

-அரவிந்தர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## விஷச்சுழலை விட்டு வெளியேறுதல்!

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இலங்கை வந்து திரும்பிச் சென்ற பிறகு, தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஆங்காங்கே உதிர்க்கும் கருத்துக்கள், கடைசியில் அவர்கள் மிகவும் நம்பிக்கையிழந்து விட்டதைக் காட்டுகின்றன. கிருஷ்ணாவுடன் பேசியபிறகு அரசாங்கம் கூட்டமைப்புடனான பேச்சை ரத்து செய்து விட்டதானது அவர்களை நிலைகுலைய வைத்திருப்பதாகத் தெரிகிறது.

அதற்கேற்றாற் போலவே, கிருஷ்ணாவின் அறிவிப்பும் அமைந்தது. ஜனாதிபதியையும் அமைச்சர்களையும் சந்தித்த பிறகு, கொழும்பு வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய கிருஷ்ணா, தமிழ்க் கூட்டமைப்புடனான இருதரப்புப் பேச்சுவார்த்தையுடன் நின்றுவிடாது, எல்லாக் கட்சிகளையும் உள்ளடக்கிய தெரிவுக்குழுவில் கலந்துரையாடி 13வது திருத்தத்துக்கு மேலதிக திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் தீர்வொன்றுக்குச் செல்ல முடியும் என்று சொன்னார்.

இதை கூட்டமைப்பு எதிர்பார்க்கவில்லை என்று தெரிகிறது. இனப்பிரச்சினைக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை இந்தியா ஆதரிக்கிறது என்று இப்படிப் பட்டவர்த்தனமாகத் தெரிவித்துவிட்ட பிறகு, அவரிடம் போய் என்ன கேட்க முடியும்?

கூட்டமைப்புடனான சந்திப்பு கிருஷ்ணாவின் நிகழ்ச்சி நிரலில் இல்லை என்று முதலில் இந்தியத் தரப்பினால் அறிவிக்கப்பட்டது. பிறகு கிருஷ்ணா ஒப்புக்கொண்டு சந்தித்தபோதும், இவர்கள் பள்ளிக்கூடச் சிறுவர்கள் போல அவரிடம் முறையிட்டதாக இவர்களே தெரிவித்திருக்கும் விடயங்களைக் கேட்டால் தமிழ்மக்கள் நாணமுறும்படியாகத்தான் இருக்கிறது.

"ஒரு வருடமாக நாங்கள் பேசியும் ஒரு அங்குலம் கூட நகர முடியவில்லை. உங்களுக்கு வாக்குறுதி அளித்த மாதிரி இலங்கை அரசுத் தரப்பினர் நடந்து கொள்கிறார்களில்லை. இந்தியாவில் மாநிலங்களுக்குள்ள அதிகாரங்களைக் கூட கேட்டால் தர மறுக்கிறார்கள். நீங்கள்தான் பார்த்து ஏதாவது செய்ய வேண்டும். இந்தியா அழுத்தம் கொடுத்தால்தான் கொழும்பு ஆட்சியாளர்கள் தீர்வைத் தர இறங்கி வருவார்கள். இல்லாவிட்டால் எங்களுடைய பேச்சால் எந்தப் பயனும் விளையாது."

நம்புங்கள், கிருஷ்ணாவிடம் தாங்கள் பேசிய விஷயங்களாக கூட்டமைப்பு தன் பேச்சாளரூடாக ஊடகங்களுக்குத் தெரிவித்திருப்பது இவைதான். அதாவது, வழக்கம் போல கிருஷ்ணாவிடமும் போய் அதே பழைய ஒப்பாரியை மூக்கால் அழுது முறையிட்டிருப்பதைத் தவிர, இந்தியத் தரப்பிடமிருந்து எந்த நம்பிக்கையையும் பெற்றுக் கொள்ள இவர்களால் முடியவில்லை.

தினமுரசு ஏற்கனவே குறிப்பிட்டிருந்ததைப் போல, இவர்கள் இனி இந்தியாவைத் திட்டிவிட்டு, "பொறுங்கள், ஜெனீவா மனித உரிமை மாநாட்டில்தான் இலங்கை அரசுக்கு இருக்குச் சங்கதி, இன்னும் கொஞ்சம் காத்திருங்கள்" என்று தமிழ்மக்களிடம் அடுத்த 'சுத்தலை' ஆரம்பிக்கப் போகிறார்கள்.

யாழ்ப்பாணம் வந்த கிருஷ்ணா, எல்லோரும் காண அமைச்சர் டக்ளசுடனேயே சிரித்துப் பேசிக் கொண்டிருந்து விட்டாராம்! கூட்டமைப்பின் யாழ்ப்பாணப் பத்திரிகை இதை வேறு இந்தியாவைத் திட்டுவதற்கு ஒரு காரணமாக்கியிருக்கிறது. இந்தியாவின் எண்ணங்களைப் புரிந்துகொண்டு எங்களுக்கான தீர்வுக்கு அவர்களைப் பயன்படுத்துவதற்கு கூட்டமைப்புக்கு முடியவில்லை. மாறாக, இந்தியாவையும் பகை எல்லைக்குத் தள்ளிவிடுவதிலேயே இவர்களது 'வீரவசன அரசியல்' சென்று முடிகிறது.

வாய்பாட்டை ஒப்புவிப்பது போல இலங்கை அரசு மீதான குற்றச்சாட்டுகளை அடுக்கிவிட்டு, நீங்கள்தான் ஏதாவது பார்த்துச் செய்ய வேண்டும் என்ற கையறுநிலைப் புலம்பலை, இன்றைய உலகம் கவனத்திலேயே கொள்ளாது என்று திரும்பத் திரும்ப நிரூபணமாகிக் கொண்டே இருக்கிறது. ஆனாலும், அதைப் புரிந்துகொள்ளாதது போலவே இவர்கள் தொடர்ந்தும் நடிக்கிறார்கள்.

உலகத்திடம் என்ன கேட்பது என்பது எமக்குத் தெரியாத வரை அல்லது உலகம் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளாத வரை அல்லது புரியாதது போன்ற நடிப்பிலேயே சுயலாப அரசியலைச் செய்துகொண்டிருக்கும் வரை இந்த விஷ வட்டத்திலிருந்து நமக்கு வெளியேற்றமில்லை.

- ஆசிரியர் -

# காணிச் சுற்றுநிருபத்தை வாபஸ் பெறுவதாக அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு மற்றும் விசேட அபிவிருத்தித் திட்டங்கள் தவிர ஏனைய நோக்கங்களுக்கு காணிகள் விநியோகிப்பதை தற்காலிகமாக தடை செய்வதான சர்ச்சைக்குரிய காணிச் சுற்றுநிருபத்தை வாபஸ் பெறுவதற்கு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தலை, சட்டமா அதிபரின் பிரதி சொலிஸ்டர் ஜெனரல் திருமதி முருது பெர்ணான்டோ நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அறிவித்தார்.

இந்தச் சுற்றுநிருபமானது வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கென விசேடமாக விடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சுற்றுநிருபம் தேசிய பாதுகாப்பு மற்றும் விசேட அபிவிருத்தித் திட்டங்கள் தவிர ஏனைய நோக்கங்களுக்காக காணிகளை விநியோகிப்பதை தற்காலிகமாக தடைசெய்திருந்தது.

இந்நிலையில், குறித்த காணிச் சுற்றுநிருபத்தை இரத்துச் செய்யுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆணைகோரும் விண்ணப்பமொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், மன்றில் ஆஜரான சட்டமா அதிபரின் பிரதிச் சொலிஸ்டர் ஜெனரல், மேற்படி சுற்றுநிருபத்தை வாபஸ் பெறுவதான அறிவித்தலை விடுக்குமாறு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு தனக்கு ஆலோசனை வழங்கியதாகக் குறிப்பிட்டார்.

இதனையடுத்து, சுமந்திரன் எம்.பி. சார்பில் மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.கனகேஸ்வரன், "மேற்படி சுற்றுநிருபம் வாபஸ் பெறப்பட்டுள்ளதால், இந்தச் சுற்றுநிருபத்துக்கு எதிரான வழக்கினை வாபஸ் பெறுவதா? இல்லையா? என்பது குறித்து மறுபரிசீலனை செய்யப்படும் என்று கூறினார்.

இதனைத் தொடந்து இந்த வழக்குத் தொடர்பான விசாரணையினை எதிர்வரும் மார்ச் மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

## பொதுக்கிணறுகளை சுத்தம் செய்யும் நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி- கண்டாவளை, ஊரியான் கிராமத்தில் டி.ஆர்.சி. நிறுவனத்தால் அமைக்கப்பட்ட பொதுக் கிணறுகளை சுத்தம் செய்து கொடுப்பது தொடர்பான பொது அமைப்புக்களுடனான கலந்துரையாடல் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இக்கிராமத்தில் குறித்த நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட பொதுக்கிணறுகள் உரிய முறையில் வேலைகள் பூர்த்தியாக்கப்படாமல் பயனாளிகளிடம் கையளிக்கப்படவில்லை என்று மேற்படி நிறுவனத்தின் மீது முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே இக்கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.

இதில் குறித்த நிறுவனத்தினரால் இக்கிராமத்திலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் அபிவிருத்திச்சங்கம், கமக்கார அமைப்பு, சிரேஷ்ட பிரஜைகள் அமைப்பு, சிறுவர் பாதுகாப்புக் குழு ஆகியன ஒன்றிணைந்து கலந்துரையாடலை நடத்தி உடனடியாக இப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள 7 பொதுக்கிணறுகளையும் உரிய முறையில் சுத்தம் செய்து பயனாளிகளிடம் கையளிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இது தொடர்பான வேலைகளை உடனடியாக முன்னெடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டது.(கே)

## முப்பெரும் ஆண்டு விழா

(குருநகர்)

மாவை சமூக எழுச்சி இயக்கத்தின் முப்பத்தோராம் ஆண்டு விழாவும் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாச முப்பதாம் ஆண்டு விழாவும் புனர்வாழ்வு- கல்வி-அபிவிருத்தி நிதிய பதினேழாம் ஆண்டு விழாவும் இணைந்ததாக முப்பெரும் ஆண்டு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணிமுதல் மாலை 06.30 மணிவரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கோலாகலமாக நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எழுச்சித் தந்தை ஆர்.எம்.நாகலிங்கம் தலைமையில் ஆரம்பமாகும் மேற்படி விழாவில் காலை அரங்கின் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அங்கத்தவருமான பேராசிரியர் சு.மோகனதாஸ் மற்றும் இலங்கை கல்வி அமைச்சு ஓய்வு நிலை மேலதிக செயலாளரும், அரச பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினருமான உடுவை எஸ்.தில்லை நடராசா, யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகப் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி ஆகியோர் கலந்து கொள்வர்.

மாலை அரங்கப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை போராசிரியர் கலைவாணி இராமநாதன் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் சமூகஜோதி விருது, துறைசார் வித்தகர் விருது, சமூகப்பற்றாளர் விருது, சமூக முன்னோடி விருதுகளுக்கு 23 பேர் தெரிவு செய்யப்பட்டு தனிப் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

சமாதான நீதவான்கள் 07 பேரும் முதுமாணி எம்.பி.ஏ பட்டம் பெற்ற ஒருவர், இளமாணிப் பட்டம், தேசிய டிப்ளோமா மற்றும் உயர் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றோர் பாராட்டப்படல். கடந்த வருடம் நடத்தப்பட்ட கல்வி சார் தமிழ், ஆங்கிலப் போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கல் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து புலமைப்பரிசில் நன்கொடை வழங்கல், மாணவர்களுக்கான வருடாந்த கல்வி நன்கொடை, நலிவுற்ற சமாச அங்கத்தவருக்கு நன்கொடை வழங்கல் என்பவற்றை அடுத்து கலை நிகழ்சிகள் நடைபெறும். (68)

# மாணவர்களை நல்வழிப்படுத்துவதில் பெற்றோர்களுக்கு கூடிய பங்கு உண்டு

## அளவெட்டி அருணோதயக் கல்லூரி அதிபர் தெரிவிப்பு

(அளவெட்டி)

ஆசிரியர்களை விடவும், பெற்றோர்களே மாணவர்களை நல்வழிப்படுத்தும் பொறுப்பில் கூடிய கவனம் செலுத்தவேண்டுமென அளவெட்டி அருணோதயக் கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கல்லூரியில் நடைபெற்ற தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழாவில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது

மாணவர்களின் முகங்கள் அழகிய பூக்களைப் போன்றது. இந்த மாணவர்களை நல்வழிப்படுத்தும் பொறுப்பிலிருந்து சில பெற்றோர் விலகிச் சென்று விடுகின்றனர். சிலபெற்றோர் பாடசாலைகளில் தமது பிள்ளைகளை சேர்த்தால் சரியென்ற மனப்பான்மையுடன் செயற்படுகின்றனர். இது தவறாகும். பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்ப்பதுடன் மட்டும் பெற்றோரின் பங்கு முடிவதில்லை. அதன் பின்னர் அவர்கள் பாடசாலைக்கு வந்து வகுப்பாசிரியர்களுடன் தொடர்பு கொண்டு, தமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாடு தொடர்பாகக் கேட்டறிந்து கொள்ளவேண்டும். சில பெற்றோர்களின் அசிரத்தையான செயற்பாடுகளாலேயே மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது.

அத்துடன் பெற்றோருக்கும் ஆசிரியருக்குமிடையில் சுமுகமான உறவு நிலவவேண்டும். அப்போதுதான் மாணவர்களின் கல்வியில் முன்னேற்றம் ஏற்படும் தற்போது எமது பாடசாலையில் உயர்தரப் பிரிவில் கணித, விஞ்ஞானப் பிரிவுகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் எமது பிரதேச மாணவர்கள் மேலும் நன்மையடையவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக கால்கோள் விழாவின் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் வி.கே.நடராசா, மக்கள் வங்கியின் அளவெட்டிக் கிளை அலுவலர் எஸ்.சிவகுமார், தபாலக ஊழியர் மயூரன் மற்றும் தரம் ஒன்று மாணவர்கள் நரசிங்க ஆலயத்திலிருந்து வரவேற்கப்பட்டு, நிகழ்வு மண்டபத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டனர். அங்கு தலைமையுரை, விருந்தினர் உரையைத் தொடர்ந்து மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# கிளிநொச்சி - மலையாளபுரத்தில் புதிய பாடசாலை திறந்து வைப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மலையாளபுரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட திருவள்ளுவர் வித்தியாலயம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இப்பிரதேச மக்கள் இப் பகுதியில் பாடசாலை ஒன்று அவசியம் திறக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்தை அடுதது ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் அதற்கான நடவடிக்கையை முன்னெடுத்து இப்பாடசாலையைத் திறந்து வைத்தார்.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றுகையில், கிராமங்களில் பின்தங்கிய பிரதேசம், உயர் பிரதேசம் என்ற வேறுபாடு இல்லை. கடந்த காலங்களில் நிலவிய வளப்பங்க்டுகளின் சமச்சீர் அற்ற தன்மையே இன்று இந்த நிலையைத் தோற்றுவித்துள்ளது. எனவே அவவாறான பிரதேசங்களை வளப்படுத்துவதற்கான துரித நடவடிக்கையை நாம் மேற்கொண்டு வருகின்றோம். அதற்காகவே மக்களின் கோரிக்கையை ஏற்று மலையாளபுரத்தில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆரம்ப சுகாதார நிலையமும் விரைவில் திறந்து வைக்கப்படும். ஏனைய உட்கட்டுமான செயற்பாடுகளும் இங்கு விரைவாக ஆரம்பிக்கவுள்ளோம எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் முருகவேல், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் கிருஷ்ணசாமி, கோட்டக்கல்விப்பணிப்பாளர் அமிர்தலிங்கம், ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், கரைச்சிப் பிரதேச செயலகத்திட்டமிடல் பணிப்பாளர் அமல்ராஜ் மற்றும் அரச அதிகாரிகள், அயற்பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், கிராம மட்டப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (29)





சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க ஆண்டு பொதுக்கூட்ட நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீனிவாசன் மங்கள விளக்கேற்றுவதையும், தென்மராட்சி பிரதேச செயலாளராக கடமையாற்றி பதவியுயர்வு பெற்றுச் சென்ற செ.ஸ்ரீநிவாசனுக்கு ஓய்வு நிலை கிராமசேவை உத்தியோகத்தர் வை.இராசரத்தினம் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் காணலாம். (11)

# குடிசன தொகை மதிப்பீடு விபரம் திரட்டும் செயற்பாடு

(வடமராட்சி)

யாழ் குடாநாட்டில் குடிசன வீட்டு வசதிகள், தொகை மதிப்பீடு போன்றன மேற்பார்வை செய்யப்பட்டு அது தொடர்பான பத்திரமொன்று தயாரிக்கப்படவுள்ளது.

இதற்கமைய சகல பிரதேச செயலகங்களிலும் இதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதற்கு சகல பிரதேச செயலாளர்களும் உதவித்தொகை மதிப்பீட்டு ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டு அதற்கு உதவியாக உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு தற்போது பயிற்சியுடன் முன் ஆயத்த வேலைகளும் நடைபெறறுக்கொண்டிருக்கும் நிலையில், அடுத்த மாதத்தில் இருந்து ஒரு மாதத்திற்கு மதிப்பீடு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (116

# ஆங்கில டிப்ளோமா பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கக் கோரிக்கை

(வலிகாமம்)

உயர் தொழிநுட்பக்கல்லூரிகளில் தேசிய ஆங்கில டிப்ளோமா கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்து வேலையற்றிருக்கும் வட மாகாண டிப்ளோமா பட்டதாரிகளுக்கு ஆங்கில ஆசிரியர் நியமனம் வழங்குமாறு ஆங்கில டிப்ளோமா பட்டதாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமாகாணத்திலுள்ள உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா பட்டதாரிகள் ஒன்றிணைந்து அக் கோரிக்கையினை எழுத்து மூலம் வட மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும், வடமாகாணக்கல்வி அமைச்சுக்கும் சமர்ப்பித்துள்ளனர்.

இக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமாகாணப் பாடசாலைகளில் 600 இற்கும் மேற்பட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதாக வடமாகாணக் கல்வித் திணைக்கள புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

வடமாகாண பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றி வருகின்றனர்.

அதுமட்டுமன்றி இருமொழிப்பாடசாலை, ஆங்கில மொழிமூலக் கற்றல் (தரம் 06 - 13) கணினிக் கற்கைகள் எனப்பல கற்றல் செயற்பாடுகள் பாடசாலைகளில் இடம்பெற்று வருகின்றன. இதன் காரணமாக வடமாகாணப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் ஆங்கில உயர்தேசிய டிப்ளோமாப்பட்டம் பெற்றுவிட்டு நாம் வேலையற்றியிருப்பது சமூக நோக்கில் பெரும் வள வீணடிப்புக்கான செயலாகும்.

வடமத்திய மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகளுக்கு ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்புக்கு ஏற்ப ஆங்கில ஆசிரிய (2-II) நியமனங்கள் வழங்குவதற்கு வடமத்திய மாகாண கல்வி அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே எங்களது நியாயபூர்வமான கோரிக்கைகளை ஏற்று ஆங்கில ஆசிரிய நியமனம் வழங்க ஆவண செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம் என அக்கோரிக்கை கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (06)

# சிறப்புற நடைபெற்ற கால்கோள் விழா

(வேலணை)



வேலணை சரஸ்வதி வித்தியாலத்தில் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால் கோள் விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வில் தீவக கல்வி வலய சித்திரப்பாட ஆசிரிய ஆலோசகர் பாஸ்கரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டுாா்.

இப்பாடசாலை மாணவர்களுக்கென மக்கள் வங்கி இசுறு உதான செயற்றிட்டத்தின் கீழ் புத்தகப்பை, தண்ணீர்ப் போத்தல்கள், சப்பாத்துக்கள் ஆகியன வழங்கியதாக பாடசாலைச் சமூகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (85)

# சாயி நிறுவனங்கள் நடத்திய அன்புவார போட்டி முடிவுகள்

வடபிராந்திய சத்திய சாயி நிறுவனங்களின் இணைப்புக்குழுவினால் நடத்தப்பட்ட அன்புவாரகட்டுரை, கவிதை, சித்திரப் போடடிகளில் முதல்மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிட்டப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள அன்பு வார ஒன்று கூடல் விழாவில் இவாகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

பல்கலைக்கழகத்திற்கு முன்பாக இராம நாதன் வீதியில் அமைந்துள்ள சத்தியசாயி நிறுவனத்தில் நடைபெறும் இவவிழாவில், வெற்றிபெ்ற்ற மாணவர்களை கலந்துகொண்டு பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ளுமாறு கல்வி இணைப்பாளர் கே.வி.சிவனேசன் அறிவித்துள்ளார்.

வெற்றிபெற்ற மாணவர்களின் பெயா விபரம் வருமாறு

கட்டுரை - பிரிவு 01

ஜெ.காயத்திரி (யா/அருணோதயாக் கல்லூரி), இ.கிரிசாநதி (யா /நெடுந்தீவு மகா வித்தியாலயம்), மூவர் மூன்றாமிடம வா.ஜெயப்பிரசன்னா (யா/ஹாட்லிக் கல்லூரி), ஜெ.அபிசனா (யாழ். சங்கானை சைவப்பிரகாச மகா வித்தியாலயம்), சி.லக்சியா (யா /மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்).

பிரிவு 02 (இருவர் முதலாம் இடம்)

யோ. யோன்எமில்ரன் யா/ சென்பற்றிக்ஸ் கல்லூரி), ஸ்ரீ.யஸ்மினா (யா/ வண்ணை நாவலா் மகா வித்தியாலயம்), க.இலக்சனி (யா/ வட்டுமத்திய கல்லூரி), ப. கஜனி (யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

பிரிவு 03 (இருவர் இரண்டாம் இடம்)

தே.மயூரா (யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி), ந.கம்சாயினி (யா/ இந்துமகளிர் கலலூரி), சி.கம்சாயினி (யாழ். வட மராட்சி இந்து மகளிர் கல்லூரி), வி.கௌசிகா (யா/ இந்து மகளிர் கல்லூரி), (நான்கு பேர் மூன்றாம் இடம்) அதனுசா (யா நலலூர் ஆனநதா வத்தியாலயம்), த.திலகசியா (யா/ தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம்), கி.றஜிதா (யா/ வட மராட்சி இந்துமகளிர் கல்லூரி).

கவிதை - பிரிவு 1

வி.சாமினி (யாழ். புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயம்), ப.கஜானன் (யாழ். இந்துக் கல்லூரி), ஜெ.ஜெனகா (யாழ். இராமநாதன் கல்லூரி).

சித்திரம் - பிரிவு 1

யோ. அரவிந்தன் (யாழ். இணுவில் மத்திய கல்லூரி), மு.அபிராம் (யாழ். நெல்லியடி மகா வித்தியாலயம்), அ.சங்கீதா (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

# யாழ். வர்த்தகக் கண்காட்சியில் கூட்டுறவு உற்பத்திகள் காட்சிக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இன்று முதல் மூன்று தினங்கள் நடைபெறவுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் கூட்டுறவுச் சங்கங்கள் தத்தமது உற்பத்திப் பொருட்களைக் காட்சிக்கு வைப்பதுடன விற்பனையும் செய்யவுளளன.

இக்கண்காட்சியும், விற்பனையும் தினமும் முற்பகல் 10.00 மணிமுதல் மாலை 7 மணிவரையும் நடைபெறவுள்ளது.

மேற்படி கண்காட்சியில் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்தி வரும் 'ஜகுபி' பழரசத் தொழிற்சாலையின் உற்பத்திப் பொருட்கள், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் யாழ்கோ பால் உற்பத்திப் பொருட்கள் மற்றும் பண்டத்தரிப்பு, அச்சுவேலி, வேலணை ஆகிய பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பனை உற்பத்திப் பொருட்களையும், ஏனைய பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திப் பொருட்களையும் பெற்று கண்காட்சிக்கு வைப்பதுடன், விற்பனையும் செய்யவுள்ளன.




காரைநகர் - வலந்தலை அமெரிக்கன் மிசன் ஆரம்பபாடசாலையில் கடந்த 11 வருடங்களின் பின்னர் இவ்வாண்டு கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தீவக வலய ஆசிரிய ஆலோசகர் மு. கேசவன் புதிதாக இணைந்து கொண்ட மாணவனுக்கு பரிசில் வழங்குவதையும், புதிய மாணவர்கள் விருந்தினர்களுடன் நிற்பதையும் காணலாம். (50)

## வேலணை பிரதேச சபையின் பட்ஜட்டில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

வேலணை பிரதேச சபையின் வருடாந்த வரவு செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் திட்டத்திற்கென சபையின் வருமானம் சமமாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் கு.சிவகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

தவிசாளர் எஸ். சிவராசா தலைமையிலான பிரதேச சபையின் நிர்வாகத்தினரால் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு அவை அனைவராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி வரவு செலவுத் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து அல்லைப்பிட்டி, மண்டைதீவு, மண்கும்பான், புங்குடுதீவு, நயினாதீவு, போன்ற உபபிரதேச காரியாலயங்களில் இயங்கும் நான்கு நூல் நிலையங்களுக்கு நூல் கொள்வனவு மற்றும் வாசகர்களின் வாசிப்பு மேமபாட்டுக்காகவும் தலா இரண்டரை இலட்சம் ரூபா வீதம் 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதைவிட இந்த நான்கு கிராமங்களில் மண்டைதீவு, கொண்டகம் வீதித் திருத்தம் அல்லைப் பிட்டி, மண்கும்பான் உள்வீதித் திருத்தம் மற்றும் புங்குடுதீவு ஊரதீவு போன்ற பகுதிகளின் உள் வீதிக்கட்டமைப்பு, நயினாதீவி லுள்ள சிறு வீதித் திருத்தம் போன்ற வற்றிற்குதலா 5 இலட்சம் வீதம் 20 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது பிரதேச சபை காரியாலயம் அமைந்துள்ள வேலணைக் கிராமத்தின் அம்பிகை நகர்வீதிஅபிவிருத்திக்கும்5 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மொத்தமாக வேலணைப் பிரதேச சபையின் வீதி மற்றும் நூலகங் களின் அபிவிருத்திக்கென 35 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர்தெரிவித்தார்.(23)

## பொதுக்கூட்டம்

குருநகர் புனித யாகப்பர் ஆலய திருஇருதய சபையின் 107 ஆவது ஆண்டு நிறைவும், வருடாந்தப் பொதுக்கூட்டமும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் தலைவர் சி.தர்சீசியஸ் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பங்குத்தந்தை அருட்திரு ஆர். எக்ஸ் நேசராசா அடிகள் கலந்து கொளவார். புதிய நிர்வாகிகள் தெரிவு மற்றும் நடப்பாண்டின் செயற்பாடுகள் கடந்த வருட அறிக்கைகள் சமர்ப்பிப்பு என்பன இடம் பெறும். (68)

## முரசின் இன்றைய பலன்

(20.01.2012 -வெள்ளிக்க்கிழமை)

கர வருஷம் தை மாதம் 6 ஆம் திகதி. துவாதசி மாலை 5.23 நட்சத்திரம் கேட்டை, மரணயோகம் மாலை 5.54

இராகுகாலம் 11.05 - 12.35 வரை, சுபநேரம் 6.35 - 8.05 வரை

எமகண்டம் 3.35 - 5.05வரை, குளிகை காலம் 8.05 - 9.35 வரை பிரதோஷவிரதம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் :- | கவனம் தேவை, பயணம் தவிர், வாழ்க்கையில் திருப்தி, அகாலபோஜனம். |
| ரிஷபம்:- | சுக வீனம், தொழில் வளம், முகராசி, வைராக்கியம். |
| மிதுனம் :- | விவகாரவெற்றி, சகோதரர் உதவி, உடல் ஆரோக்கியம், அவசரம் கூடாது. |
| கடகம்:- | இலாபதினம், வழக்குகளில் வெற்றி, வாக்குசாதுர்யம், குடும்பச் சிறப்பு. |
| சிம்மம்:- | திருப்திகரம், நினைத்தது நடக்கும், குடும்பத்தில் தன்னிறைவு, பெரியோர் சேர்க்கை. |
| கன்னி :- | குடும்ப சுகம், பணத்தட்டுப்பாடு, அவசரம் கூடாது, உடல் நலக்குறைவு. |
| துலாம் :- | சகோதர நன்மை, பிரயாணத்தில் வெற்றி, அந்நியர் குறுக்கீடு, பணப்புழக்கம். |
| விருச்சிகம்- | பெருமை, அதிக செலவு, கஷ்டம் நீங்கும், செல்வம் பெருகும். |
| தனுசு:- | பெரும் மகிழ்ச்சி, வேலைவாய்ப்பு, உறவினர் உதவி, சொத்துக்களில் திருப்தி. |
| மகரம்:- | மனதில் தெளிவு, விடாமுயற்சி, நினைத்த காரிய சித்தி, சுபகாரியம். |
| கும்பம் :- | உறவினர் வருகை, காரியானுகூலம், விரும்பியது கிடைக்கும், அதிர்ஷ்டம். |
| மீனம் :- | இலாபதினம், ஸ்தலவழிபாடு, வியாபாரத்தில் முன்னேற்றம், பெருமை. |

# குடாநாட்டில் 350 பேர் காசநோயினால் பாதிப்பு

### - வைத்திய அதிகாரி யமுனானந்தா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் காசநோயினால் 350 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 12 வயதிற்குட்பட்ட 5 சிறுவர்களும் அடங்குகின்றனர். இதற்கு போதியளவு விழிப்புணர்வு இன்மையே காரணமாக அமைகின்றது என யாழ். மாவட்ட காசநோய் வைத்திய அதிகாரி டாக்டர் சி. யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

டாக்டர் சி. யமுனைானந்தா எழுதிய மனித உரிமை அணுகுதல் என்னும் விடயம் பற்றிய காசநோய் தொடர்பான நூல் வெளியீட்டுவிழா அணமையில் யாழ். பண்ணை மார்பு நோய் நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தற்போது யாழ். மாவட்டத்தில் காசநோயின் தாக்கம் அதிகரிக்கும் நிலை காணப்படுகிறது. இதேவேளை காசநோய் வைத்தியசாலையில் பணியாற்றுவதற்கு தாதியர்கள், பொதுநிர்வாக உத்தியோகத்தர்கள் இல்லை.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் காசநோய் வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை. அத்துடன் காசநோய் சிகிச்சைக்கான ஆய்வுகூட வசதிகளும் இல்லாதுள்ளது. இதனால் காசநோயாளர்களுக்கு உரிய சிகிச்சையை வழங்க முடியாத நிலை காணப்படுகிறது.

யுத்த காலத்தின் போது 3 இலட்சம் மக்கள் நெருக்கமான சூழலில் வாழ்ந்து வந்தார்கள். யுத்தத்தின் போது ஏறிகணை வீச்சுக்களில் பல மக்களின் சுவாசக் குழாயில் இராசாயனத்துணிக்கைகள், மண்துணிக்கைகள் என்பன நுரையீரலில் படிந்துள்ளன. இதற்கு உரிய சிகிச்சைகளைப் பெறாது எத்தனையோ பேர் உள்ளனர்.

இவ்வாறு சிகிச்சையைப் பெறாமல் இருப்போருக்கே பியுமோகோனியோ, மைக்ரோகோபிக், சிலிக்கோஹோல்கனஸ், கோனியோஸிஸ் என்ற புதிய நோய்கள் ஏற்பட்டுள்ளன.

எந்த வகையான எறிகணைகள் வீசப்பட்டன என ஆன்மீகத்தலைவர்கள் அரசாங்கத்துடன் கலந்துரையாடி அவை எந்தவகையானது என கண்டறிந்தால் இந்நோயை குணப்படுத்துவதற்கான மருந்துவகைகளைக் கண்டு பிடிக்க முடியும். இல்லாதுவிட்டால் இந்நோயைக் குணப்படுத்த முடியாது.

புலம்பெயர்ந்து வாழும் வைத்தியர்கள் உதவினால் இங்குள்ள நோயாளர்களைக் காப்பாற்ற முடியும்.

யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரி, கோப்பாய் ஆகிய பிரதேசங்களில் காசநோய் வைத்தியசாலைகளை நான் நடத்தி வருகிறேன்.

வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் இவ்வாறான வைத்தியசாலைகளில் கடமைபுரிய விரும்புகின்றார்கள் இல்லை. இது தொடர்பாக வடமாகாண சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

## செயற்திட்ட நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

இந்தியன் வங்கி யாழ். கிளையின் நவீன கிராம அபிவிருத்தித் திட்டத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா நாளை சனிக்கிழமை காலை 11 மணிக்கு வங்கியின் யாழ். கிளையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் யாழ். மாவட்ட இந்திய துணைத்தூதுவர் வி. மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## தவிட்டில் நிறக்கலவை; கால்நடைகள் பாதிப்பு

(வடமராட்சி)

யாழ். குடாநாட்டில் விற்பனை செய்யப்படும் தவிட்டு வகைகளில் நிறக்கலவை கலந்திருப்பதால் கால் நடைகள் பாதிப்படைவதாக கால் நடைவளர்ப்போர்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக வெள்ளைப் பச்சை அரிசித் தவிட்டிலேயே சிவப்பு நிறக் கலவையும் உமியும் பெருமளவில் கலக்கப்பட்டுள்ளதாகவும் இதனை அறியாது தாம் அவற்றை வாங்கி தமது கால் நடைகளுக்கு வைக்கும் போது கால்நடைகள் சோர்வடைந்து பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பெருமளவு முதலீட்டில் கால் நடைகளைக் கொள்வனவு செய்து வளர்த்து வரும் நிலையில், இவ்வாறான மோசடிகளால் தாம் பெரிதும் பாதிக்கப்படுவதுடன் வருமான இழப்பும் ஏற்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இவ்வாறான நிறக்கலவைத் தவிடுகள் கிழக்கு மாகாணத்தில் இருந்தே கொண்டு வரப்படுவதாகவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுக்கவேண்டுமெனவும் கால்நடைவளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர். (116)

## மொழிவிருத்தித் திறன் வாய்மொழிப் பரீட்சை

(திருநெல்வேலி)

அரச உத்தியோகத்தர்களுக்கான மொழி விருத்தித்திறன் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து வாய்மொழி மூலப் பரீட்சைக்குத் தோறறத்தவறியவர்களுக்கான வாய்மொழி மூலப் பரீட்சை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத் தில் நடைபெறவுள்ளது.

ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் காலை 9.00 மணிக்கு இப் பரீட்சை நடைபெறவுள்ளதுடன், கரும மொழிகள் திணைக்கள ஆணையாளரினால் உரியவர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன.

முன்னர் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு வாய்மூலப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான கடிதங்கள் திகதி குறிப்பிடப்பட்டு அனுப்பப்பட்டிருந்தன. ஆனால் அந்தக் காலப் பகுதியில் தபால் திணைக்கள ஊழியர்களின் பணிப் பகிஷ்கரிப்பினால் பலருக்கு இக்கடிதங்கள் குறிக்கப்பட்ட திகதிக்குப் பின்னரே கிடைக்கப்பெற்றிருந்தன. இதனால் பல பரீட்சார்த்திகள் இப் பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் போயிருந்தார்கள்.

தவறியவர்களுக்கான வாய் மூலப் பரீட்சை பிறிதொரு திகதியில் நடைபெறும் என அரச கரும மொழிகள் திணைக்களம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (137)



# யாழ்ப்பாணம் வானம் பார்த்த பூமி?

பருவமழையை நம்பி மட்டும் ஒரு போகம் அல்லது இரு போகம் செய்யும் விவசாய நிலங்கள் எல்லாம் வானம் பார்த்த பூமி என்ற அடைமொழியினா லேயே விளிக்கப்படும். வானம் பொழி யும் நீரைக் குளங்களில் தேக்கி வைத் தும், ஆற்றுப்படுகைகளின் திசைகளை மாற்றி ஓட வைத்தும் விவசாயத்திற்கு நன்கு பயன்படுத்தும் வழக்கம் ஆதிகாலம் முதற் கொண்டு அண்மைக்கால அரசியலி னைத் தீர்மானிக்கும் காரணியாக அமைந்து வருவது சரித்திரமே.

குளங்களை அமைப்பதும், அதனைத் தூர்ந்துவிடாமல் பாதுகாப்பதும் அன் றைய செங்கோலின் தலையாய கடமை யாக அமைந்திருந்தது. இலங்கையில் இருந்த ஒரு அரசனுக்கு குளக்கோட்டன் என்ற நாமமே அவனது பெருமையை விளக்குவதாய் இருந்தது. அவ்வாறே தென்னிந்தியாவில் முல்லைப்பெரியாறு என்ற அணைக்கட்டின் வாயிலாக பாயும் நீரில் இன்று செங்குருதியும் சேர்ந்து பாயும் அளவிற்கு தண்ணீர்ப் பிரச்சினை தலைதூக்கி ஆடுகிறது.

இந்த இருபக்க அரசியல்களின் தனி ஆவர்த்தனக் கச்சேரியில் இருபுறமும் அடி வாங்குவது அப்பாவி விவசாயி களின் வாழ்வுதான். எனவேதான் யாழ்ப் பாண மக்களின் அன்றைய, இன்றைய ஏன் நாளைய வாழ்வுபற்றி எண்ணும் பொழுது, யாழ்ப்பாணம் வானம் பார்த்த பூமி ஆகவே இருக்கப் போகின்றதா என எண்ணத் தோன்றுகின்றது.

1987 இல் இந்திய சாமாதானப்படை படை வந்து இறங்குவதற்கு முன்பாக கெலி கொப்டர்களில் இருந்து உணவுப் பொதி கள் போடப்பட்ட பொழுது "வயிற்றுக் குத்துக்கு கூட வடக்கத்தானை நம்பிய தில்லை : இன்று வானத்தில் இருந்து விழும் உணவுப் பொதிகளை நிமிர்ந்து பார்க்கும் யாழ்ப்பாணம் வானம் பார்த்த பூமிதான்" என பிறவி என்ற ஒரு நபர் எழுதிய கட்டுரை இச்சமயத்தில் என் கண்முன்னே தோன்றி மறைகின்றது.

பின்பு நடந்ததும்... அது ஒரு துன்பியல் சம்பவம் என்ற வகையறாவுக்குள் இந்த நிகழ்வு அடக்கப்பட்டதும்...

அடக்கிய பானையுள் எழுந்த பூதமாக முள்ளிவாய்க்கால் அவலம் உருவான தும்... ஏன் இன்றுவரை நடந்து கொண்டி ருக்கும் பூனைக்கு அப்பத்தைப் பிரித்துக் கொடுக்கும் தராசை ஏந்திநிற்கும் பெரிய தும் சிறியதுமான வல்லரசுகளில் இந்தி யாவே முதலிடத்தை வகித்துக் கொண்டு



நிற்கின்றது. வழமைபோல எங்கள் யாழ்ப் பாணமும் இந்தியாவை இரு கண்க ளாலும் ஏறிட்டுப் பார்த்தபடி இரண்டு கைக ளாலும் அனைத்து உலகத்திடமும் கைக ளை ஏந்திக் கொண்டு நிற்கின்றது.

இறுதிப் போரினைத் தடுக்க எங்கோ ஒரு தேவதூதுவன் எங்கள் மண்ணில் வந்து இறங்க மாட்டானா என முழுத் தமிழின மும் அண்ணாந்து பார்த்துக் கொண்டு இருக்க புலம் பெயர்ந்த தமிழர்கள் வீதிகளில் இறங்கி ஊர்வலங்கள், போராட்டங்கள் நடாத்திக் கொண்டு இருக்க இறுதியில் வெள் ளைப் புறாவுக்குப் பதிலாக வல்லூறுகள் வந்து இறங்கியது எம் மண்ணில் தானே. அத்தனை கிபிர்களையும் தலைதூக்கிப் பார்த்த எம் யாழ்ப்பாணம் வானம் பார்த்த பூமி தானா?

கட்சிப் பங்கீட்டில் உடன்படிக்கை ஏற்ப டாத பொழுது மத்திய அரசாங்கத்தில் இருந்து விலகுவோம் என மிரட்டல் கொடுத்த தி.மு.க. அரசு இலங்கை யுத் தத்தின் போது கசங்காத வெள்ளை வேட்டியுடன் காலை தொடங்கிய உண்ணா விரதத்தை மாலையில் முடித்துக் கொண் டதை ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருந்த யாழ்ப்பாணம் வானம் பார்க்கும் பூமி தானா?

அதற்கும் மேலாக, திரையுலகமே திரண்டு இராமேஸ்வரத்தில் நின்று இராமர் கட்டிய பாலமாக அணிவகுத்துச் செல்வோம் என வீர வசனம் பேசியதும், முல்லைப் பெரியாறு விவகாரம் வெடித்த பொழுது "7ம் அறிவு"க்குழு உட்பட மௌனம் காத்து தம் பணப்பெட்டிகளையும் படப்பெட்டிகளையும் காப்பாற்றிக் கொண்டு தொடர்ந்தும் ஈழப்பிரச்சினையில் குரல் கொடுப்பதை தலைதூக்கி செவி நீட்டிக் கேட்கும் யாழ்ப்பாணம் வானம் பார்த்த பூமி தானா?

எங்கள் பிரச்சினை ஆனந்த விகடன், நக்கீரன் தொடக்கம் சின்னச் சின்ன சிற்றி தழ்கள் வரையிலும் காசாக்கப்பட்டிருப் பது உண்மை. அவ்வாறே கடந்த ஆண்டு சென்னைப் புத்தகக் காட்சியில் கணிச மாக விற்கப்பட்ட நூல்கள் இலங்கைப் பிரச்சினை பற்றியதே. "மதராசு பட்டினத் தெருக்களில் எம் மாவீரர்கதைகள் மலி வுப் பதிப்பாக வெய்யிலிலும் மழையிலும் ஆட்டோ அடித்துச் செல்லும் சேற்றுத் தண்ணியிலும் நனையும் நிலை எம் இனத்திற்கு வந்திருக்க வேண்டாம்" என எழுதியிருந்தேன். இந்தப் பூமியிடம் தான் இன்றும் கையேந்தி நிற்கும் யாழ்ப் பாணம் வானம் பார்த்த பூமி தானா?

அண்டை நாட்டு அரசியல் இவ்வாறு என்று பார்த்தால் இறுதியுத்தத்தின் போது மௌனம் காத்த அல்லது இலங்கை அரசுக்கு ஆதரவு தெரிவித்த அத்தனை நாடுகளும் இன்று இலங்கை அரசின் மீது போர்க்குற்றத்தை சுமத்த முனைப்பாக நிற்க எதுவுமே தெரியாத அப்பாவி யாழ்ப்பாணம் ஏதோ தீர்வு வந்துவிடும் என்று மீண்டும் தலை தூக்கிப் பார்க்கும் வானம் பார்க்கும் பூமியாகிவிட்டதா என எண்ணவே தோன்றுகிறது.

புலம் பெயர்ந்த தமிழர்கள் அதிகமாக சொல்லும் எம் தொப்புள்கொடி உறவுக ளே, நாங்கள் 30 வருடத்திற்கு முன்னமே உங்களுக்கு அன்னியராகி விட்டோம். காலம் செல்ல செல்ல எம் பிள்ளைகள் வளர வளர நாங்கள் இன்னும் இன்னும் அந்நியப்பட்டுச் செல்கின்றோம் என்பதே உண்மை. எங்கள் காலம் வரை, விடுமு றைக்கு வந்து பனங்கள்ளையும் சுவைத்து ஒடியல் கூழையும் குடித்து செம்பரத்தை மரங்களுக்கு முன்னால் உங்களுடன் படம பிடித்து விட்டு வரலாம். அவ்வளவுதான்.

மேலாக புலம் பெயர் நாடுகளில் தேர், தீர்த்தத் திருவிழாக்களை தம் வசதிக்காக சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மாற்றி வைத்த எம் தமிழ் இனம் மாவீரர் தினங் களை மட்டும் அதே நாளில் இலங்கை நேரப்படி மாலை 6 மணிக்கு நடாத்தி வந்தது. இப்போது மாவீரர் தினமும் இரண்டு மூன்றாகி விட்டது. அவ்வாறே விளையாட்டு விழாக்களும். இது இன்ன மும் மேலும் பிரிவுகளைச் சந்தித்து ஆரம் பத்தில் ஆங்கில எழுத்துகளின் இணைப் பாக தோன்றிய பல இயக்கங்கள் போல இனி வரும் காலங்களில் மீண்டும் இந்தப் பிரிவுகள் பல நாமகரணங்களைச் சூட்டிக கொள்ளலாம். எனவே இந்த தேவதூது வர்கள் அந்த பனைவடலிகளுக்குள் பூஞ் சோலைகளை உருவாக்குவார்கள் என இன்னமும் தலையை துக்கிப் பார்க்கும் வானம் பார்த்த பூமியாக யாழ்ப்பாணம் இருக்கவே கூடாது. பனைகளின் பலம் அதன் வைரம் பாய்ந்த தண்டுகளே.

என்று தான் எங்கள் யாழ்ப்பாணம் வானம் பார்த்த பூமியாக அல்லாது தம் தரையில் தாம் காலூன்றி தம் கைகளில் தமது அரசியலை எடுக்கப் போகின்ற தோ அன்று தான் அனைத்திற்கும் விடிவு அல்லது விடுதலை.

-ஜீவகுமாரன்-

## பிழையின்றித் தமிழ் எழுதுவோம் 9

**கண்டுசொல் - கண்டுச்சொல்**

கண்டுசொல், என்பதும் கண்டுச்சொல் என்பதும் வேறு வேறு பொருள்தரும் சொற்றொடர்கள். அவற்றின் வேறுபாடு தெரியாமல் பயன்படுத்தலாமா? கூடாது. "கண்டு" எனும் சொல் பெயர்ச்சொல்லாக வரும்போது நூற்பந்து, கற்கண்டு என்றெல்லாம் பொருள்படும். அதே "கண்டு" வினைச் சொல்லாக வரும்போது "பார்த்து" என்று பொருள்படும்.

"சொல்" என்பதற்கும் இரு வகையான பொருள்கள் உண்டென்றாலும் நாம் இங்கே காணும் சொற்புணர்ச்சி அல்லது "வலிமிகல், மிகாமை" விளக்கத்துக்காக "மனத்தில் பட்டதை ஒளிக்காமல் சொல்" என்று சொல்கிறோமே அதில் வரும் "வாயால் வெளிப் படுத்துதல்" எனும் பொருளை மட்டும் எடுத்துக்கொள்வோம். "அவர் சொன்ன சொல் கற்கண்டுபோல இனிமையாக இருந்தது" என எழுதவேண்டுமானால், அல்லது சொல்ல வேண்டுமானால் அதைக் "கண்டுசொல்" என எழுதக்கூடாது, அது தவறு. கண்டுசொல் என்பது "பார்த்துச் சொல்" என்றுதான் பொருள்படும்.

அதேபோல, அதைக்கொஞ்சம் பார்த்துச் சொல் என்று எழுதவோ, அல்லது சொல்லவோ வேண்டுமானால் "கண்டுச்சொல்" என்பதைப் பயன்படுத்தக் கூடாது, அது தவறு. "கண்டுச்சொல்" என்பது இனிய சொல், கற்கண்டுச் சொல் என்றே பொருள்படும்.

கண்டுசொல் - பார்த்துச் சொல்
கண்டுச்சொல் - கற்கண்டுச்சொல்

## சாப்ளின் சின்னங்கள்



லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு அருகிலுள்ள வெனிஸ் என்ற இடத்தில் நடந்த குழந்தைகள் பங்குகொள்ளும் மோட் டார் கார்ப் பந்தயத்தை மையமாகக் கொண்டு சார்ளி சாப்ளின நடித்து ஒரு படம் தயாரிக்க முடிவுசெய்யப்பட்டது.

திரைப்படம் நகைச்சுவைமிக்கதாக இருக்க, பார்த்ததுமே சிரிப்பு பொத்துக்கொண்டு வ்ரும்படியான உடைகளை அணிந்து வரும்படி இயக்குநர் சாப்ளினை அவசரப்படுத்தினார். வேறு ஒரு நகைச்சுவை நடிகருக்குச் சொந்தமான பெரிய "தொளதொள" காற்கட்டையை அணிந்து, மிகப் பெரிய சப்பாத்துகளைப் போட்டுக்கொண்டு, இறுக்கமான கோட் அணிந்து, மிகச்சிறிய தொப்பியை தலையில் மாட்டிக்கொண்டு, பல் விளக்கும் பிரஷ் போன்ற மீசையையும், கையில் சிறிய மூங்கில் தடியையும் எடுத்துக்கொண்டு நடிப்பதற்காக வந்தார் சாப்ளின். அவசரக் கோலத்தில் அணிந்த இந்த நகைச்சுவை ஆடை அலங்காரமே சார்ளி சாப்ளினின் புகழ் பெற்ற நிரந்தர சின்னங்களாயின.

## அந்நாளையத் தழுவல்கள்

இரட்டை வேடக் கத்திச் சண்டைப் படங்களுக்கு அன்று இருந்த முன்மா திரிகள் மூன்று.



1. "கார்சிகன் பிரதர்ஸ்" - இதை ஜெமினி "அபூர்வ சகோதரர்கள்" என்று எடுத்து வெற்றி கண்டது. எம்.கே.ராதா நடித்தது.

2. The man in the iron mask - அலெக்ஸாண்டர் டுமாவின் நாவல். ஹொலிவூட் தயாரிப்பாளர் எட்வேர்ட் ஸ்மோல் திரைவடிவம் கொடுத்தார். இதன தமிழ்த் தழுவல் "உத்தம புத்திரன்". முதலில் பி.யு.சின்னப்பா, எம்.வி.ராஜம்மா நடித்து வெளிவந்தது. பின்னர் அதே கதை 1958-ல் சிவாஜி, பத்மினி நடித்து வெளிவந்தது. எம்.ஜி.ஆரும் இப்படத்தை எடுக்கப் போவதாக விளம்பரம் செய் திருந்தார். ஆனால் வீனஸ் பிக்ஸர்ஸ் முந்திக்கொள்ள சிவாஜியின் உத்தம புத்திரன் வந்தது.

3. "த பிரிஸனர் ஒ.்.ப் ஸெண்டா" - அன்ரனி ஹோப் நாவலைத் தழுவி டேவிட் ஓ ஸெல்ஸ்னிக் தயாரித்த




வெற்றிப்படம். இது 1937-ல். பின்னர் 1957 இலும் ஹொலிவூட்டில் இப்படம் மீண்டும் எடுக்கப்பட்டது. இதைத் தழுவி எம்.ஜி.ஆர் "நாடோடி மன்னன்" எடுத்தார். "இப்படம் ஓடினால் நான் மன்னன், இல்லாதுபோனால் நாடோடி" என்று எம்.ஜி.ஆர் கூறியதாகச் சொல்வார்கள். இது ஹிந்தியிலும் "கைதி" என்ற பெயரில் வந்தது. இதுதான் பத்மினியின் முதல் அசல் ஹிந்திப்படம். பிறகு தமிழ் நாடோடி மன்னனையும் ஹிந்தியில் டப் செய்து வெளியிடப்பட்டது.

மற்றும் எர்ரோல் .்.பிளின், ஹொலி வூட்டின் அந்த நாளைய பிரபல கவர்ச்சி நடிகர். இவரோடு நடிக்கப் பெரிய நடிகைகள் காத்துக் கிடப்பார்கள் என்றும் சொல்வார்கள்.

இவர் கதாநாயகனாக நடித்த "கப்டன் பிளட்", "ரொபின் ஹுட்" இரண்டும் தமிழில் எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடித்து "ஆயிரத்தில் ஒருவன்" மற்றும் "மர்மயோகி"யாக வந்தது. மற்றும் பல படங்களிலும் எர்ரோல் .்.பிளின் கத்திச் சண்டைக் காட்சிகள் உடனுக்குடன் எம்.ஜி.ஆர் படங்களில் வந்தன.

தொடையோடு ஒட்டிய காற்சட்டை, கோண வகிடெடுத்த பாகவதர் முடி, இடுப்பு பெல்ற், தோள்பட்டைகளில் சிறு இறக்கைகள் போலத் தோன்றும் கோட். இதெல்லாம் எர்ரோல் .்.பிளின் அந்தக் கால தமிழ் சினிமாவுக்கு அளித்த அம்சங்கள்.

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு:

இலங்கையின் தேசிய பிரச்சினைக்கு நிலையான தீர்வுக்கான பரிந்துரைகளை வழங்க, நீண்ட இழுபறியிலுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்கும் இலங்கையின் முயற்சிகளுக்கு இந்திய ஆதரவு கிடைத்திருப்பது, உற்சாகம் தருவதாகும்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம் கிருஷ்ணா, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் தி.மு ஜயரத்ன, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல் பீரிஸ ஆகியோரைச் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றுகையில், உத்தேச தெரிவுக்குழுவுக்கு இந்தியாவின் ஆதரவைத் தெரிவித்தார்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தனது பிரதிநிதிகளை நியமிக்கத் தவறியதையடுத்து, அதனுடனான பேச்சுக்களை இலங்கை அரசு இடைநிறுத்தியிருந்தது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே கிருஷ்ணா மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

வெளியுறவு அமைச்சில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய கிருஷ்ணா, தமிழ்க்கூட்டமைப்புடனான இருதரப்புப் பேச்சுக்கள், கூட்டமைப்பு அடங்கலாக எல்லாக் கட்சிகளையும் உள்ளடக்கிய தெரிவுக் குழுவின் கலந்துரையாடல்கள் அரசியல் தீர்வொன்றுக்கு வழி வகுக்கும் என்றார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான தனது சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த கிருஷ்ணா, 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு மேலதிகமாக வழங்க ஜனாதிபதி சம்மதித்திருப்பதாகத் தெரிவித்தார்.

13 ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை முற்று முழுதாக அமுல்படுத்தியும் அதற்கு மேலதிகமான அதிகாரங்களை வழங்கியும், அர்த்தபூர்வமான அதிகாரப் பகிர்வொன்று எட்டப்படுவதன் மூலம் அரசியல் தீர்வொன்றுக்குச் செல்வதற்கான தனது அர்ப்பணிப்பினை இலங்கை அரசு பல்வேறு சந்தர்ப்பங்களில் எங்களுக்குத் தெரியப்



படுத்தியிருக்கிறது. பேச்சுவார்த்தைகளுக்கான துரிதகதியிலான ஆக்கபூர்வமான அணுகுமுறையொன்றினை நாம் எதிர்பார்க்கின்றோம். பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் பரிந்துரைகளுக்கமைவாக, அரசுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குமிடையில தொடர்ச்சியாக இடம்பெறும் பேச்சுவார்த்தைகள் அரசியல் தீர்வுக்கு வழிவகுக்கும் என்று நாம் நம்புகின்றோம்... என்றார்.

13 ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் அமுலாக்கத்துக்கான காலஅவகாசம் குறித்த முடிவுகளேதும் எட்டப்பட்டதா எனக கேட்கப்பட்டபோது இல்லையெனப் பதிலளித்தார் அமைச்சர் கிருஷ்ணா.

நெகிழ்வுத் தன்மையற்ற கால அவகாசங்கள் விதிக்கப்படுவது நல்லதொரு அணுகுமுறையாகக் கருதப்பட முடியாதென்றார் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்.

இலங்கையுடனான பேச்சுவார்தைகளில், வர்த்தகம், சேவைகள் மற்றும் முதலீடு, அபிவிருத்திக் கூட்டுறவு, விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், கலாசாரமும் கல்வியும் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டதாக அமைச்சர் கிருஷ்ணா தெரிவித்தார்.

இலங்கையின் இறையாண்மை, ஒற்றுமை, பிராந்திய ஒருமைப்பாடு என்பனவற்றில் இந்தியா அர்ப்பணிப்புடனிருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் கிருஷ்ணா, போரை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்ற இலங்கைத் தலைமைத்துவத்தின் சிந்தனை இனிமேல் நாட்டில் நியாயமான் அரசியல் தீர்வொன்றைப் பெற்றுத்தரப் பயன்படுமென, தான் நம்புவதாகத் தெரிவித்தார். "உரிய காலத்தில், இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டு மென்பதால், தற்போதைய பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றத்தை நாங்கள் எதிர்பார்க்கிறோம்" என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

1987-1990 காலப்பகுதியில், இலங்கை வந்த இந்தியப்படையினரில் 1500 க்கும் மேற்பட்டோர் எல்.ரீ.ரீ.ஈ யுடனான யுத்தத்தில் உயிரிழந்தனர். அமைச்சர் கிருஷ்ணா கொழும்பிலுள்ள, இந்திய அமைதிகாக்கும் படையினரின் நினைவகத்துக்குச் சென்றார். "இலங்கையிலுள்ள இந்திய அமைதிகாக்கும் படையினரின் நினைவகத்துக்கு வருகை தந்தமை பெருமையளிக்கின்றது. இலங்கையில் அமைதிகாப்பதற்காகப் போரிட்டு உயிர்த் தியாகம் செய்த வீரம் மிகுந்த இந்தியப் படையினரின் நினைவாகக் கட்டப்பட்டது இது. இது இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவின் வலிமையான சாட்சியமாக விளங்குகின்றது. அதேவேளை, இலங்கையில் ஸ்திரத்தன்மை, அமைதி, பிராந்திய ஒருமைப்பாடு என்பன நிலைக்கவேண்டும் என்பதற்கான இந்தியாவின் அர்ப்பணிப்பின் அடையாளமாகவும் அது விளங்குகின்றது. எங்களது வீரர்களின் துணிவுக்கும் அர்ப்பணிப்புக்கும் எனது அஞ்சலிகளை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அங்கு தெரிவித்தார் கிருஷ்ணா.

-சமீந்ரா பேர்டினான்டோ-

நன்றி: தி ஐலண்ட் (18-01-2012)

## சாவிலும் புதுமை!



ஆபிரிக்காவிலுள்ள கானா நாட்டைச் சேர்ந்த சவப்பெட்டி செய்யும் கலைஞர் அண்மையில் இங்கிலாந்தில் நடத்திய கண்காட்சி உலகப் புகழ் பெற்றுவிட்டது. சவப்பெட்டியில் அப்படி என்ன புகழ் என்று கேட்கிறீர்களா? நமக்கு அதிகம் விருப்பமான விமானம், செல்போன், அன்னாசிப்பழம், திமிங்கலம், கார், குளிர்பானப் போத்தல்கள் உள்ளிட்ட பல்வேறு உருவங்களைப் போன்று சவப்பெட்டியை இவர் தயாரித்து காட்சிக்கு வைத்திருந்தார். "1950-ம் ஆண்டில் இருந்து இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளேன். நான் இதுபோன்று பல உருவங்களில் சவப்பெட்டியைச் செய்வதால், எங்கள் பழங்குடி இனத்தில் இறப்பு, பண்டிகை போன்று கொண்டாடப்படுகிறது. விமானம்தான் நான் முதலில் செய்த உருவம். அதை வாங்கிச் சென்றவர், "இதுவரைக்கும் விமானப்பயணம் என்க்கு வாய்க்கவில்லை. நான் இறந்த பின்பாவது இந்த விமானத்தில் பயணிக்கிறேன்" என்று சொல்லி வாங்கிச் சென்றார்" என்கிறார் அந்தக் கலைஞர். இங்கிலாந்தில் நடைபெற்ற கண்காட்சியில் இவருக்கு எக்கச்சக்க ஓர்டர்கள் குவிந்துவிட்டனவாம். வாழைப்பழம், ரோபோ போன்ற உருவங்களுக்கான கேள்விகள்தான் அதிகமாக குவிகிறதாம் இவருக்கு.

# இந்த எழுத்தாளரின் சிபாரிசு இப்படி...



தி.ஜா

தி.ஜா.வை நான் தில்லியில் சந்தித்திருக்கிறேன். அவருடைய எல்லா நாவல்களையும் மாங்கு மாங்கென்று ஒரே அமர்வில் படித்திருக்கிறேன். ஒவ்வொரு நாவலும் 500, 600 பக்கம் இருக்கும்... மரப்பசு மட்டும்தான் சின்னது. மலர் மஞ்சம், அன்பே ஆரமுதே, (புகழ் பெற்ற) மோகமுள், அம்மா வந்தாள், நளபாகம், உயிர்த் தேன், செம்பருத்தி என்ற அவருடைய நாவல்களைப் படிக்காமல் அப்போது எந்த எழுத்தாளனும் எழுத வர முடியாது. இப்போதும் சொல்கிறேன். தமிழில் எழுத வரும் யாரும் தி.ஜா.வைப் படிக்காமல் வரவே முடியாது.

ஆனால் எனக்கு தி.ஜா.வின் நாவல் எதுவுமே பிடிக்கவில்லை. காரணம், நான் தமிழைப் படித்து இலக்கிய வாசகனாக



எம்.வி.வெங்கட்ராம்



கு.ப.ரா



நகுலன்



கரிச்சான்குஞ்சு



அசோகமித்திரன்

ஆகவில்லை. தமிழில் படித்தது சாண்டில்யன், கல்கி, சுஜாதா. அதற்குப் பிறகு உடனே நான் Jean Genet, D.H. Lawrence, Louis Ferdinand Celine என்று போய் விட்டேன். பிறகுதான் நகுலன், மௌனி, புதுமைப் பித்தன், தி.ஜா., கரிச்சான் குஞ்சு, எம்.வி. வெங்கட்ராம், ந.பிச்சமூர்த்தி என்று வந்தேன். அதாவது, 20 வயதில் வெளிநாடு சென்றவன் 10 ஆண்டுக் காலம் கழித்துத் தன் சொந்த நாட்டுக்குத் திரும்புவது போல.

அந்தக் காரணத்தினால் தமிழ் இலக்கியவாதிகள் கொண்டாடிய பலரை என்னால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. ந.பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன் ஆகியோரை முற்றாக நிராகரித்தேன். (பலமுறை படித்து விட்டுத்தான் படிக்காமலேயே அல்ல).

மேலும், இந்த நிராகரிப்புக்கு இலக்கிய வாசிப்பு என்ற ஒரே ஒரு காரணத்தைத் தவிர வேறு எந்தக் காரணமும் இருக்கவில்லை.

இவர்களில் கரிச்சான் குஞ்சு, எம்.வி. வெங்கட்ராம், அசோகமித்திரன், கு.ப.ரா. அளவுக்கு தி.ஜா.வின் நாவல்கள் என்னை ஈர்க்கவில்லை. எனக்கு மிக நெருக்கமாகத் தெரிந்தவர் நகுலன் மட்டுமே.

சுந்தர ராமசாமியை என்னால் எழுத்தாளராகவே ஏற்க முடியவில்லை. தமிழில் mediocre எழுத்தின் ஒட்டு மொத்த வடிவம் அவர். தமிழ் எழுத்தாளர்கள் அத்தனை பேரையும் வசீகரித்த சு.ரா. நேர்ப்பேச்சில் கூட என்னை ஈர்க்கவில்லை. ஒரு சராசரி அரசாங்க குமாஸ்தாவிடம் பேசுவது போல் இருந்தது எனக்கு. அதற்கு ஒரே காரணம், தர்மு சிவராமு. சிவராமுவிடம் பழகியவர்களால் சு.ரா.விடம் பழகுவது சிரமம். சிவராமு ஒரு தீப்பிழம்பு. அவரிடம் பேசி விட்டு வந்தால் ஒரு சிங்கத்திடம் இருந்து விட்டு வந்தது போல் இருக்கும். அந்தக் காரணத்தினால் மட்டுமே எலிக் குஞ்சுகள் என்னை ஈர்க்கவில்லை.

தி.ஜா.வை தில்லியில் அவர் குடியிருந்த கர்ஸன் ரோட் அபார்ட்மெண்ட்டில் சந்தித்திருக்கிறேன். இப்போது அந்தச் சாலையின் பெயர் கஸ்தூர்பா காந்தி மார்க். அங்கு நான் கொஞ்ச காலம் வேலை பார்த்த போது அடிக்கடி தி.ஜா.வை அவர் வீட்டில் சந்திப்பேன். அவர் மனைவி கொடுக்கும் அற்புதமான கா∴பியைக் குடித்துக் கொண்டே "ஸார்". உங்கள் நாவல்களில் intensity இல்லை.... ஒரு refined பாலகுமாரன் மாதிரிதான் தெரிகிறீர்கள்... என்றேன் ஒருமுறை. அப்போதுதான் நீல மலைப் பனிமலர் என்ற பத்திரிகையில் மரப்பசுவைக் கடுமையாக விமர்சித்து என்னுடைய கட்டுரை ஒன்று வந்திருந்தது. அதையும் அவர் படித்திருந்தார்.

சிறிது கூட கோபமே இல்லாமல் சிரித்துக் கொண்டே "உங்களுக்குப் பிடித்த எழுத்தாளர்கள் யார்?" என்றார்.

"Jean Genet.... தமிழில் நகுலன்...

"இலக்கியத்தில் நீங்கள் தீவிரவாதி போல" என்னால் அப்படியெல்லாம் எழுத முடியாது...

"தமிழில் கு.ப.ரா.வையும் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதோடு, உங்கள் சிறுகதைகள் எனக்கு மிகப் பிடித்தமானவை. அதில் இருக்கும் தீவிரம் உங்கள் நாவலில் இல்லை"...

எனக்கு அப்போது ப. சிங்காரத்தைத் தெரியாது. தெரிந்திருந்தால் குறிப்பிட்டு இருப்பேன்.

எனக்கு என்னவோ தி.ஜா. இப்போது உயிரோடு இருந்திருந்தால் என்னைக் கொண்டாடி இருக்க மாட்டார் என்றே தோன்றுகிறது. ஏனென்றால், நான் பெரிதும் கொண்டாடும் அசோகமித்திரன், நகுலன், சுஜாதா யாருக்குமே என் எழுத்து பிடிக்காது. அசோகமித்திரனுக்கு நான் எழுத்தாளனே அல்ல. நகுலனுக்குப் பிடித்த எழுத்தாளர் யார் என்று கேட்டால் நீங்கள் மன உளைச்சல் அடைவீர்கள். அவர் பெயர் அழகிய சிங்கர். விருட்சம் பத்திரிகையின் ஆசிரியர். அவரை இலக்கிய அகிலன் என்று சொல்லலாம்.

சுஜாதா விஷயம் கொஞ்சம் வேடிக்கையானது. சுஜாதா உயிரோடு இருந்த காலத்தில் இலக்கியவாதிகள் அனைவராலும் வணிக எழுத்தாளர் என்று முத்திரை குத்தப்பட்டு புறக்கணிக்கப் பட்டவர். அந்தக் காலத்திலேயே அவரை சிலாகித்து எழுதிய ஒரே எழுத்தாளன் நான் மட்டுமே. ஆனால் அவர் என் எழுத்தை மலம் என்று சொன்னார். அதற்காக நான் வருத்தப்பட வில்லை. எனக்குத் தான் அவர் எழுத்து பிடித்திருக்கிறதே ஒழிய அவருக்கும் என் எழுத்து பிடித்திருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை.

தி.ஜா.வுடனான உரையாடல் தொடர்ந்தது. "எனக்கு கா∴ப்காவையும் கம்யுவையும் (Albert Camus) கூடப் பிடிக்காது சார்" என்றேன். ஆச்சரியத்துடன் "ஏன், நீங்கள் ஒரு வித்தியாசமான மனிதராகத் தெரிகிறீர்களே?" என்றார்.

"ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. எப்படிப்பட்ட எழுத்தாக இருந்தாலும் அதில் ஏதாவது ஒரு அம்சம் என்னைப் படிக்கத் தூண்ட வேண்டும். Louis Ferdinand Celine இன் எழுத்து மிகவும் gloomy-ஆகத்தான் இருக்கும். ஆனால் வாசிப்புக்கு அது குறுக்கே நிற்காது. கம்யுவையும் கா∴ப்காவையும் எவ்வளவு முயற்சி செய்தும் என்னால் ஐந்து பக்கங்களுக்கு மேல் தாண்ட முடியவில்லை. Just boring...."

இந்தப் புத்தக விழாவில் நான் பரிந்துரைக்கும் எழுத்தாளர்கள்:

அசோகமித்திரன், கோபி கிருஷ்ணன், நகுலன், எம்.வி. வெங்கட்ராம், இந்திரா பார்த்தசாரதி, கு.ப.ரா., தி.ஜானகிராமனின் சிறுகதைகள், ஆதவன், ஷோபா சக்தி (சிறுகதைகள்), புயலிலே ஒரு தோணி (ப.சிங்காரம்), தஞ்சை ப்ரகாஷ், கரிச்சான் குஞ்சு, க.நா.சு. மொழிபெயர்த்த எல்லாமும்.

எஸ். ராமகிருஷ்ணனின் சிறுகதைகள், மனோஜின் புனைவின் நிழல்.

-சாரு நிவேதிதா-

# அரசியல் தீர்வுக்கான நிலைப்பாட்டை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்

## கோரியது ஐக்கிய தேசியக் கட்சி

(கொழும்பு)

அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசாங்கம் தன்னுடைய நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் இப்போது வந்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

13 ஆவது திருத்தத்துக்கும் மேலாகச் சென்று இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்குத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உறுதியளித்திருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்த பினனரும், இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்தும் மௌனம் சாதிப்பதாகவும் அக்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொர்டர்பில் கருத்து வெளியிட்ட ஐ.தே.க.வின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க, "அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ள வெவ்வேறு கட்சிகள் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் வெவ்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. அதேவேளையில் அரசாங்கமும் அரசியல் தீர்வு தொடர்பில் முரண்பாடான கருத்துக்களையே வெளியிட்டு வருகின்றது.

அரசாங்கத்தின் இவ்வாறான முரண்பாடான அணுகுமுறை காரணமாக அனைத்துத் தரப்பினரும் குழப்பமடைந்த நிலையில் உள்ளனர். இந்த நிலையிலேயே இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கொழும்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். இது இந்தக் குழுப்பங்களை மேலும் அதிகரித்திருக்கின்றது.

அரசாங்கம் இவ்விடயத்தில் தன்னுடைய நிலைப்பாடு என்ன என்பதை நாடாளுமன்றத்தில் அறிவிக்கும் என ஐக்கிய தேசியக் கட்சி நம்புகின்றது. உறுதியான அரசியல் தீர்வொன்றைக் காண்பதில் தனிப்பட்ட கருத்துக்கள் எந்தவிதமான பங்களிப்பையும் செய்வதாக அமையாது. அரசாங்கம் தன்னுடைய நிலைப்பாடு என்ன என்பதை உரிய முறையில் வெளிப்படுத்த வேண்டிய தருணம் வந்திருப்பதாகவே கருதவேண்டும் என்றார்



# பாகிஸ்தான் - இலங்கைக்கிடையில் நீதித்துறை ஒத்துழைப்பு அவசியம்

## - அமைச்சர் ரவூப் ஹக்கீம் -

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நீதித்துறை தொடர்பிலான ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றின் அவசியம் பற்றி நீதியமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் சீமா இலாஹி பலோச்சிடம் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் சீலா இலாஹி பலோச் அமைச்சர் ரவூப் ஹக்கீமை நீதியமைச்சில் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்து இரு தரப்பு விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்.

யுத்தம் முடிவடைந்து சமாதானம் நிலவும் காலப்பகுதியில் நாட்டில் பரவலாக அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறிய அமைச்சர் ஹக்கீம், உயர்ஸ்தானிகரின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போது, அவுஸ்ரேலியா போன்ற நாடுகள் இங்கு நீதிச் சீர்திருத்தம் சார்ந்த திட்டங்களுக்கு ஒத்துழைத்து வருவதாகக் குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நீதித்துறை ஒத்துழைப்பு உடன்படிக்கை ஒன்று இரு நாடுகளுக்கும் பயனுள்ளதாக அமையும்.

முஸ்லிம்களின் பரிணாமத்தை அரசாங்கம் கவனத்தில் கொண்டே இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு தொடர்பில் தீர்மானிக்குமென தமது கட்சி நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நூற்றாண்டு விழாவில் பீரிஸ் இல்லை; ஆபிரிக்க காங்கிரஸ் அதிருப்தி

(கொழும்பு)

தென்னாபிரிக்காவின் ஆளும் கட்சியான ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் நூற்றாண்டு விழாவில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் பங்குபற்றாமை குறித்து அக்கட்சியின் தலைவர்கள் ஏமாற்றத்தை வெளிபபடுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்விழாவில் பங்குபற்றுமாறு உலகத் தமிழர் பேரவைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதால், வெளிவிவகார அமைச்சர் பீரிஸை இவ்விழாவுக்கு அரசாங்கம் அனுப்பவில்லை. மாறாக தென்னாபிரிக்காவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் ஷெஹான் ரட்ணவேல் இதில் பங்குபற்றினார.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு இவ்விழாவில் பங்குபற்றியதுடன் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்களுடன் கலந்துரையாடல்களையும் நடத்தியது. இக்கலந்துரையாடலின்போது ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்கள் மேற்படி அதிருப்தி யை வெளியிட்டதாக தெரிவிக்கப்படுகிறது

# அமைச்சரவையில் மாற்றம்; விசாரணை நடத்த வேண்டும்

(கொழும்பு)

அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படவிருப்பதாக கடந்த வாரம் கொழும்பு ஊடகங்கள் வெளியிட்டிருந்த செய்தி தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என சபாநாயகர் சமல் ராஜபக்ச கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

கொழும்பு ஊடகம் ஒன்று கடந்த வாரம் வெளியிட்ட செய்தியில் சபாநாயகர் புதிய பிரதமராக நியமிக்கப்படுவதுடன் அமைச்சரவையில் முக்கிய மாற்றங்கள் இடம்பெறும் எனவும் தெரிவித்திருந்தது.

இருந்தபோதிலும், இந்தச் செய்தியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உடனடியாகவே மறுத்திருந்தார்.

இந்தச் செய்தியின் உண்மைத் தன்மை தொடர்பாக நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோதே சபாநாயகர் இவ் விடயம் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.



# மனித உரிமை நிலைமைகள்; அமெரிக்க முதலீட்டாளர் கவனம்

(கொழும்பு)

இலங்கை மனிதஉரிமை நிலைமைகள் குறித்து அமெரிக்க முதலீட்டாளர்கள் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை இது அவ்வளவாகப் பாதிக்காது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையுடன் கூடுதலான உறவுகளைப் பேணுவதற்கு அமெரிக்கா விரும்புவதாக ஆபிரிக்க, மத்திய கிழக்கு, தென் ஆசிய நாடுகளுக்கான வர்த்தக விவகார துணைச் செயலாளர் ஹோலி வின்யார்ட் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சீனா உள்ளிட்ட எந்தவொரு நாட்டுடனும் போட்டி போடுவதனையே அமெரிக்கா விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சீனத் தலையீடு குறித்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான ஜீ.எஸ்.பி சலுகைத்திட்டம் குறித்து அமெரிக்கா கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பட்டதாரிகள் வேலைவாய்ப்பு பெப்ரவரிக்கு முன் விண்ணப்பம்

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகள் 15 ஆயிரம் பேரை சேவையில் இணைத்துக் கொள்வதற்காக பெப்ரவரி மாத இறுதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரப்படும் என்று சுதந்திர பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் சிரேஷ்ட உப தலைவரும், தகவல் தொழிநுட்ப அமைச்சருமான ரஞ்சித் சியம்பலாபிட்டிய இதனை தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைசசர் இதனைத் தெரிவித்தார்.

இதற்கான நடவடிக்கைகள் தற்சமயம் இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்

# சிறுவர்மீதான துஷ்பிரயோகம்; பிணை வழுங்கும் சட்டத்தில் திருத்தம்

(கொழும்பு)

சிறுவர்களை துன்புறுத்தலுக்கு உட்படுத்துபவர்களுக்கு பிணை வழங்கும் சட்டத்தில் மாற்றம் கொண்டுவருவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கவனம் செலுத்தியுள்ளது.

இதற்கான யோசனையை அடுத்த வாரத்தில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக அதிகாரசபையின் தலைவரும், சட்டத்தரணியுமான அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்காக இந்தச் சட்ட திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக அனோமா திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

வழக்கு விசாரணைகளுக்கு நீண்டகாலம் எடுப்பதால், அவற்றிலிருந்து குற்றவாளிகள் இலகுவாக தப்பித்துக் கொள்கின்றனர்.

திறமையான சட்டத்தரணிகள், குற்றவாளிகளுக்கு சார்பாக வழககாடி, அவர்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுப்பதால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு எவ்வித நியாயங்களும் கிடைப்பதில்லை.

மிகவும் குறுகிய காலப்பகுதியில் சிறுவர்களைத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய நபர்கள், சிறையிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர்.

எவ்வாறாயினும், சிறுவர்களை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய நபர்களுக்கு விரைவில் தண்டனை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் அதிகாரசபை கூடுதல் கவனம்செலுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அபிவிருத்தி, கட்டுமானப் பணிகள்; இர்ாணுவத்திற்கு தனிப்பிரிவு

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்தி மற்றும் கட்டுமான பணிகளில் பங்கேற்கும்நோக்கில் இராணுவம் தனியான நிறுவனம் ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது என இராணுவத்தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் விலை மனுக்கோரல் விதிமுறைகளைப் பின்பற்றக் கூடிய வகையில்இந்த நிறுவனம் இயங்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனியான ஓர் நிறுவனமொன்றை அமைத்து இந்தப் பணிகளை மேற்கொள்ளுமாறு இராணுவத்திற்கு, ஜனாதிபதி ஆலோசனை வழங்கியதாக அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறான ஓர் நிறுவனத்தை அமைப்பது குறித்து திட்டங்களை முன்வைக்கும்நோக்கில் குழுவொன்று அமைககப்பட்டுள்ளது.

இராணுவத்திற்குள் இது ஓர் தனி அலகாக அல்லது தனி நிறுவனமாக இயங்கக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு இராணுவத்தினர் அளித்த பங்களிப்பின் மூலம் சுமார் 300 மில்லியன் ரூபாவினை அரசாங்கத்திற்கு சேமித்துகொடுததுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

வீதி அமைப்பு, கட்டட நிர்மாணம் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் இராணுவத்தினர் பங்களிப்பு வழங்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# மனித உரிமை குறித்த குற்றச்சாட்டை ஆணைக்குழு அறிக்கை பலவீனமாக்கும்

## சோசலிச மக்கள் முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மனித உரிமையை மீறியதாக சர்வதேச மனித உரிமை ஆணைக்குழு சுமத்தும் குற்றச்சாட்டை தளர்வடைய செய்ய கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பேருதவியாக இருக்கும் என சோசலிச மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இலங்கை சமசமாஜ கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி மற்றும் இலங்கை மக்கள் கட்சி ஆகியன இணைந்து உருவாக்கியுள்ள சோசலிச மக்கள் முன்னணியின் தலைவர் திஸ்ஸ விதாரண கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற உள்ள சர்வதேச மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில், இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுகளை சுமத்த சர்வதேச ஏகாதிபத்தியவாதிகள் காத்துள்ளனர். இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டு வருவதாக அவர்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர். இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் கூறுகின்றனர். இவ்வாறான நிலையில், கடந்த காலங்களில் இடம்பெற்றவை குறித்து நம்பிக்கையை ஏற்படுத்தும் விடயங்களை ஒன்றிணைத்து, உருவாக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையானது எவரும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அமைந்த அறிக்கையாகும்.

அரசியல் கட்சிகள் கடந்த காலங்களில் விட்ட தவறுகள் காரணமாக இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றதாக அறிக்கையில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. அதிகார பரவலாக்கலை அடிப்படையாக கொண்டு, நாட்டின பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண முடியும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் பரிந்துரைகளை மிக விரைவாக அமுல்படுத்த வேண்டும். தெரிவுக்குழுவில் கூடி எதிர்காலத்திற்காக இலங்கையின் அடையாளங்களுடன் கூடிய நாட்டை உருவாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்துள்ளார்.

04) ரிஸ்மியா ஒவ்வொரு சனிக்கிழமையும் தனது அப்பம்மாவை பார்க்கப் போவாள். ரிஸ்மியா முந்தநாள் தன் அப்பம்மாவை பார்க்கப் போயிருந்தால், நாளை மறுதினம் என்ன கிழமை?

..........................................................................................

05) ஒரு காற்சட்டையை வெயிலில் உலர்த்த 5 நிமிடங்கள் தேவை எனின், 10 காற்சட்டைகளை உலர்த்த எவ்வளவு நேரம் தேவை?

..........................................................................................

**06. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 01) Village | : .......................... | 02) Jungle | : .......................... |
| 03) Stones | : .......................... | 04) Train | : .......................... |
| 05) Nest | : .......................... | 06) Carpenter | : .......................... |
| 07) Mosque | : .......................... | 08) Rainbow | : .......................... |
| 09) Net ball | : .......................... | 10) Spoon | : .......................... |

**07. பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 01) புடுவ | : .......................... | 02) தாத்தா | : .......................... |
| 03) பதுர | : .......................... | 04) கிரிபத் | : .......................... |
| 05) சுதுபாட்ட | : .......................... | 06) ரதுபாட்ட | : .......................... |

**08. 'மாலைக்காட்சி' என்னும் தலைப்பில் சரியான எழுவாய், பயனிலையுடன் அமைந்த 06 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.**

01) ..........................................................................................

02) ..........................................................................................

03) ..........................................................................................

04) ..........................................................................................

05) ..........................................................................................

06) ..........................................................................................



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - I

1 மணி 15 நிமி

# கல்வி முரசு

வெளியீடு 18



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**பந்தியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க.**

மரக்கிளையின் மேலிருந்த மாம்பழக்குருவியானது மலரப்போகும் ஒரு மொட்டைப் போன்று காட்சியளித்தது. இடையிடையே தன் தலையை அசைத்து சுற்றும் முற்றும் பார்த்த குருவி ஆபத்து என எண்ணும் எதனையும் காணவில்லை. எனினும், துரதிர்ஷ்டமான அக்குருவி பார்க்காத ஒரு பக்கம் இருந்தது. சிறிதேனும் அப்பக்கத்தைப் பார்த்திருந்தால் தன்னை இரையாக்குவதற்கு, தனக்கு மிக அருகில் குறிபார்த்திருக்கும் சாரைப்பாம்பைக் கண்டிருக்கும். பழைய தேய்ந்த சைக்கிள் டயரைப் போன்ற கறுப்பு நிறமான சாரைப் பாம்பு சிறிய பூமொட்டைப் போன்ற மாம்பழக்குருவியை அவ்வேளையில் பிடித்துக் கொண்டது. குருவி கீச்.... கீச்... எனப் புலம்பியது,

01) இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிராணிகள் எவை?

..........................................................................................

02) மாம்பழக்குருவி எதைப் போன்று காட்சியளித்தது?

..........................................................................................

03) சாரைப் பாம்பு எங்கே இருந்தது?

..........................................................................................

04) கீழே தரப்பட்ட சொற்களின் எதிர்ச்சொற்களை எழுதுக.
1) கீழே .......................... 2) அதிர்ஷ்டம் ..........................

05) கீழே தரப்பட்ட சொற்களின் ஒத்த சொற்களை எழுதுக
1) மொட்டு .......................... 2) நிறம் ..........................

06) கீழே தரப்பட்ட சொற்களின் பன்மைச் சொற்களை எழுதுக
1) கிளை .......................... 2) தலை ..........................

07) கீழே தரப்பட்ட சொற்களின் ஆங்கிலச் சொற்களை எழுதுக
1) மரம் .......................... 2) கறுப்பு நிறம் ..........................
3) பாம்பு .......................... 4) பூ ..........................

**02. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01) மணம் எதுவுமற்ற பூ பின்வருவனவற்றில் எது?
1) கடதாசிப் பூ 2) தாமரைப்பூ 3) அலரிப்பூ 4) ரோஜாப் பூ

02) மயில்களுக்கு எப்போதும் எதிரியான பிராணி எது?
1) தேவாங்கு 2) கழுகு 3) நரி 4) பாம்பு

03) தாவர இலை குழைகள், விலங்குகளின் கழிவுகள் என்பவற்றை உக்கலடையச் செய்யும் பிராணி எது?
1) காகம் 2) கோழி 3) மண்புழு 4) மீன்கள்

04) வீடுகளில் பயன்படுத்துகின்ற களியினால் செய்யப்பட்ட பாவனைப் பொருள் எது?
1) எவர்சில்வர் 2) கோப்பை 3) மண்சட்டி 4) அகப்பை

05) உணவு உண்ணுதல் தொடர்பான நற்பழக்க வழக்கம் எது?
1) உணவை அவசரமாக மென்று விழுங்குதல்.
2) உணவை ஏனையோருடன் கதைத்தவாறு உண்ணுதல்.
3) உணவு உண்ண முன்பு கைகளை நன்றாகக் கழுவுதல்.
4) உணவு வகைகளைப் பசி ஏற்படும் வேளையெல்லாம் உண்ணுதல்.

06) உணவு வகைகள் அசுத்தமடையும் சந்தர்ப்பம் அல்லாதது எது?
1) உணவு வகை மீது பல்லி விழுதல்.
2) உணவு வகைகளை மூடி வைத்தல்.
3) உணவின் மீது தூசு படிதல்.
4) அழுக்கான பாத்திரத்தில் சமைத்தல்.

07) இலங்கையைச் சூழவுள்ள கடலின் பெயர் யாது?
1) பசுபிக் சமுத்திரம் 2) இந்து சமுத்திரம் 3) வங்களாவிரிகுடா 4) அத்திலாண்டிக் சமுத்திரம்

08) பின்வருவனவற்றில் விஷத்தன்மையுள்ள பிராணி எது?
1) கரப்பான் 2) ஓணான் 3) மட்டைத்தேள் 4) தவளை

09) உலோகப் பாத்திரங்களில் இட்டு வைக்கக்கூடாத பொருள்
1) மிளகாய்த்தூள் 2) மிளகு 3) கறியுப்பு 4) சீனி

10) நுளம்புகளால் பரப்பப்படும் நோய் அல்லாதது எது?
1) டெங்கு 2) கொலரா 3) மலேரியா 4) சிக்குன் குனியா

**03. தரம் 04 மாணவர்களில் சுற்றாடல், கணிதம், தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்களை விரும்பும் மாணவர்கள் தொடர்பான நிரல் வரைபு கீழே தரப்பட்டுள்ளது.**




01) அதிக மா

02) மிகக் குறைந்த மாணவர்கள் விரும்பும் பாடம் எது? ..............................

03) சிங்களத்தைவிட சுற்றாடல் பாடத்தை விரும்பும் மாணவர் தொகை யாது? ..............................

04) தமிழ், கணிதம் ஆகிய இரு பாடங்களையும் விரும்பும் மாணவர் தொகை யாது? ..............................

05) வகுப்பிலுள்ள மாணவர் தொகை எத்தனை? ..............................

06) மாணவர் விரும்பும் பாடத்திற்கு ஏற்ப, பாடங்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக. ..............................

07) கணித பாடத்தைவிட, ஆங்கில பாடத்தை விரும்பும் மாணவர் தொகை எத்தனை?
..............................

**04. பின்வரும் தொடர் வாக்கியங்களைத் தனி வாக்கியங்களாக எழுதுக.**

01) ஆசிரியர் பொன்னும், பொருளும் பெறவில்லை.
..............................
..............................

02) நாதன் கோழி முட்டையை விற்றுப் பணம் பெற்றான்.
..............................
..............................

03) தம்பியும், நானும் பாடசாலைக்குப் போனோம்.
..............................
..............................

04) வீட்டின் ஜன்னல்களும், கதவுகளும் உடைந்திருந்தன.
..............................
..............................

05) எல்லோரும் வரிசையாக வந்து, ஆசனத்தில் அமருங்கள்.
..............................
..............................

**05. விடை தருக**

01) பிரியாவின் வயதின் 4 மடங்கு வயதை உடையவள் சுதா, சுதாவின் வயது 12 எனில், பிரியாவின் வயது எத்தனை?
..............................

02) தாயின் வயதைவிட மகனின் வயது 20 வருடங்கள் குறைவாகும். தாய்க்கு 45 வயதாகும் போது மகனின் வயது எத்தனை?
..............................

03) பெரேரா 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி பிறந்தான். இவன் தனது 10 ஆவது பிறந்த நாளை எந்த வருடம் கொண்டாடுவான்?
..............................


விசேட வினாத்தாள் I - தரம் 05 - 2012 - கல்விமுரசு

# 15 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்டம் அராலி சரஸ்வதி சம்பியனானது



(யாழ்ப்பாணம்)

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி சங்கானை கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட 15 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் நூற்றாண்டு விழா வெற்றிக்கிண்ணத்தை பெற்றுக் கொண்டது.

அராலி சரஸ்வதி மகாவித்தியாலய மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் 08 : 03 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னணியிலிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் சரஸ்வதி மகாவித்தியாலயம் 06 : 04 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னணியிலிருந்தபோது ஆட்டம் முடிவடைந்தது. ஆட்ட இறுதியில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் 14 : 07 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

## விளையாட்டுச் செய்திகள்

## வீரர்கள் ஏலம்

(கொழும்பு)

பங்களாதேஷ் பிரிமியர் லீக் தொடரில் விளையாடுவற்காக இலங்கை வீரர் சனத் ஜயசூரிய 110,000 டொலர் ஏலத்தில் குல்னா ரோயல் பெங்கால் அணியினால் வாங்கப்பட்டுள்ளார். அதேவேளை முத்தையா முரளிதரனை சிட்டகொங் கிங்ஸ் அணியினால் 11, 000 டொலர்களுக்கு வாங்கப்பட்டுள்ளார்.

## பிரேஸிலின் செயற்பாடுகளில் அதிருப்தி அடைகிறது 'பீபா'

FIFA WORLD CUP Brasil

2014 ஆம் ஆண்டு உலகக் கிண்ண காலபந்தாட்டத் தொடரை நடத்தவுள்ள பிரேஸில் தமது நிறுவனத்திடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைப்பதாக சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் கூறுகின்றார்.

பிரேஸிலில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு உலகக் கிண்ண காலபந்தாட்டத் தொடருக்கான மைதானங்கள் மற்றும் ஏனைய நிர்மாணப் பணிகள் உரிய முறையில் இடம்பெறவில்லை என இதற்கு முன்னர் குற்றஞ் சாடடப்பட்டிருந்து. போட்டிகளுக்காக நிர்மாணிக்கப்படும் மைதானங்களின் தரத்தை கண்காணிப்பதற்காக சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் ஜெரோம் வெல்கி பிரேஸிலுக்கு விஜயம் செய்துள்ளார்.

பிரேஸிலின் முன்னாள் நட்சத்திர வீரர் ரொனால்டோ மற்றும் அந்த நாட்டு விளையாட்டுத்துறை அமைச்சர் ஆகியோர் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

ஐந்து தடவைகள் உலக சம்பியனான பிரேஸில் தம்மிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தாலும் தாம் சட்டத்தின் பிரகாரமே செயற்படுவதாக சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் தெரிவித்தார். எதிர்காலத்தில் தமது நிறுவனம் மேலும் பல சட்டங்களை அமுல்படுத்த எணணியுள்ளதாகவும், பிரேஸிலின் செயற்பாடுகள் அதிருப்தி அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## மஹேல தலைவர்?

(கொழும்பு)

இலங்கை, இந்தியா மற்றும் அவுஸ்ரேலிய அணிகள் மோதும் முக்கோண தொடருக்கான இலங்கை அணித் தலைவராக அணியின் முன்னாள் தலைவர், உப தலைவர் மஹேல ஜயவர்த்தன நியமிக்கப்படுவார் என இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன

இதேவேளை இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவராக அசந்த டி மெல் நியமிக்கப்படவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் இடைக்கால நிர்வாக சபைத் தலைவர் உபாலி தர்மதாஸ தெரிவித்தார்.

## அறிக்கை சமர்ப்பிக்குக



இலங்கை கிரிக்கெட் அணியில் தற்போது எழுந்துள்ள பிரச்சினைக்குரிய நிலை தொடர்பாக ஆராய்ந்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு விளையாட்டுத் துறை அமைச்சர் இலங்கை கிரிக்கெட் நிறுவனத் தலைவரான உபாலி தர்மதாஸவைக் கோரியுள்ளார்.

இந்தப் பிரச்சினைகளைத் தர்ப்பதற்கான ஆலோசனைகளை விரைவாக தமக்கு அனுப்பி வைக்குமாறு விளையாட்டுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே எழுத்துபூர்வமாக அறிவித்துள்ளார்.

## முச்சக்கரவண்டி போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

யாழ். மாநகரசபை நடத்திய யாழ்ப்பாணத் திருவிழாவில் இடம்பெற்ற முச்சக்கரவண்டி போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் வருமாறு,

**(மாற்றுத்திறனாளிகள் -ஆணகள்)**

1 ஆம் இடம் நாகமணி அசோகநாதன், 2 ஆம் இடம் அபிவாசகம் தேவகுமார், 3 ஆம் இடம் இசையாகப்பு ஜோன்கெனடி, 4 ஆம் இடம் ஜெகநாதன் சஞ்சீவன், 5 ஆம் இடம் கந்தையா ராஜேந்திரம், 6 ஆம் இடம் சேவியர் மோகன்ராஜ், 7 ஆம் இடம் ஜெகநாதன் வசந்தகுமார், 8 ஆம் இடம் இரத்தினம் ஸ்ரீகாந்தராசா, 9 ஆம் இடம் இளையதம்பி விஜயரத்தினம், 10 ஆம் இடம் கறுப்புசாமி நாகராஜன்.

**முச்சக்கரவண்டி (மாற்றுவலுவினர் பெண்கள்)**

1 ஆம் இடம் இராசையா தயாநிதி, 2 ஆம் இடம் கந்தசாமி விமலாதேவி, 3 ஆம் இடம் குண்டுமணி உதயராணி.

**மரதன் ஓட்டம் - ஆண்கள்**

1 ஆம் இடம் குமார் நவநீதன (அச்சுவேலி), 2 ஆம் இடம் கிருஸணன் ஜெயந்தன் (பண்டததரிப்பு), 3 ஆம் இடம் சிவலோகநாதன் ஞானேஸ்வரன் (நெடுந்தீவு), 4 ஆம் இடம் த.தனீசன் (சாந்தை - பண்டத்தரிப்பு), 5 ஆம் இம் மகேஸ்றாபன் (குருநாகல்).

(தொடரும்...)

## அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் மூன்றாவது சுற்றில் முன்னணி வீரர்கள்

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் 3 ஆவது சுற்றுக்கு முன்னிலை வீரர்களான ரபேல் நடால், ரோஜர் பெடரர் இம் கிளைஸ்டர்ஸ், வோஸ்னி யாக்கி மற்றும் செரீனா வில்லியம்ஸ் உட்படப் பலர் முன்னேறியுள்ளனர்.

மெல்போர்னில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 2 ஆவது சுற்று ஆட்டத்தில், தரவரிசையில் 2 ஆவது இடத்தில் உள்ள ஸ்பெயின் வீரர் நடால் 6-4, 6-3, 6-4 என்ற நேர் செட்டுகளில் ஜேர்மனியின் டொமி ஹொஷஸை இரண்டரை மணி நேரத்தில் வெளியேற்றினார்.

தரவரிசையில் 3 ஆவது இடத்தில் பெடரருடன் மோதவிருந்த ஜேர்மனி வீரர் ஆன்ட்ரியாஸ் பெக் காயம் காரணமாக விலகியதால், களத்தில் இறங்காமலேயே அடுத்த சுற்றுக்கு பெடரர் முன்னேறினார்.

நடப்புச் சம்பியனான பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ் 47 நிமிடங்களில் 6-0, 6-1 என பிரான்ஸின் ஸ்டெபானி ககோனை தோற்கடித்தார்.

தரவரிசையில் முதலிடத்தில் உள்ள டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி 6-1, 7-6 (4) என ஜோர்ஜியாவின் அன்னா ததிஷ்விலியை வீழ்த்தினார்.

தரவரிசையில் 3 ஆவது இடத்தில் உள்ள பெலாரஸின் விக்டோரியா அசரென்கா 6-1, 6-0 என அவுஸ்ரேலியாவின் கேசியை வென்றார்.

5 முறை சாம்பியனும், 12 ஆம் நிலை வீராங்கனையுமான செரீனா வில்லியம்ஸ் 2 ஆவது சுற்றில் செக்குடியரசுவை சேர்ந்த பார்போராவை சந்தித்தார். இதில் செரீனா 6-0, 6-4 என்ற செட் கணக்கில் எளிதில் வென்றார். பிரெஞ்ச் ஓப்பன் சம்பியனான சீன வீராங்கனை லி நா 6-2, 6-2 என அவுஸ்ரேலியாவின் ஓலிவியா ரோகோவ்ஸ்காவை சாய்த்தார்.



இவர்களைத் தவிர தரவரிசையில் 7 ஆவது இடத்தில் உள்ள செக். குடியரசு வீரர் தோமஸ் பெர்டிச், 11 ஆவது இடத்தில் உள்ள ஆர்ஜென்டீன வீரர் ஜுவான் மார்ட்டின் டெல் போட்ரோ, செர்பிய வீராங்கனை ஜெலினா ஜோன் கோவிச் உள்ளிட்டோரும் 3 ஆவது சுற்றுக்கு முன்னேறினர்.

## இரண்டாவது போட்டியில் தோல்வி அதிருப்தி தெரிவிக்கிறார் டில்ஷான்

தென்னாபிரிக்காவுடனான மூன்றாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி மழை காரணமாக டக்வேர்த் லூயிஸ் முறையில் தோல்வியைத் தழுவியமை குறித்து இலங்கை அணித் தலைவர் திலகரட்ன டில்ஷான் ஏமாற்றம் தெரிவித்துள்ளார்.

இப்போட்டி குறித்து இலங்கை அணித்தலைவர் திலகரட்ன டில்ஷான் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த சுற்றுப்போட்டியில் இப்படியான முறையில் நாம் தோல்வியுற்றமை ஏமாற்றமளிக்கிறது. இப்போட்டியில் நாம் வெற்றி பெறுவதற்கு அதிக வாய்ப்பு இருந்தது. லஷித் மலிங்கவுக்கு 5 ஓவர்கள் மீதம் இருந்தது. தென்னாபிரிக்காவுக்கு மேலும் சுமார் 90 ஓட்டங்கள் தேவைப்பட்டன என்றார்.

அதேவேளை, "இப்போட்டியை நாம் மிகச் சிறப்பாக ஆரம்பித்தோம். எனினும் மஹேல, சங்க இருவரும் ரன் அவுட்முறையில் ஆட்டமிழந்தமை எமக்கு 20 ஓட்டங்கள் இழப்பை ஏற்படுத்தியது. அது திருப்புமுனையாகும். களத்தடுப்பிலும் நாம் முன்னேற வேண்டும் என அவர் கூறினார்

## அஜ்மலின் பந்து வீச்சில் சர்ச்சையா?

(கொழும்பு)

துபாயில் நடந்து வரும் பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்டில் இங்கிலாந்து 192 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறியது.

பாகிஸ்தான் தரப்பில் சையது அஜ்மல் 7 விக்கெட் வீழ்த்தியுள்ள நிலையில் அவரின் பந்துவீச்சு சர்ச்சைக்குரிய முறையில் இருந்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஐசிசியின் விதிமுறைகளை மீறி 15 டிகிரிக்கு மேலாக அவரது கை வளைவதாக குற்றம் சுமத்தப்பட்டது. இந்த பந்துவீச்சு தூஸ்ரா என கூறப்படுகிறது.

இதுகுறித்து அஜ்மல் கூறுகையில், கடந்த 2009 ஆம் ஆண்டும் எனது பந்து வீச்சுக் குறித்து சர்ச்சை எழுந் தது. தற்போது மீண்டும் அதே நிலை ஏற்பட்டுள்ளது. தவறுகள் எதும் இருந்தால் அதனை நடுவர்கள் பார்த்து கொள்வார்கள் என்றார்.



# கடும் குளிரால் ஆந்திராவில் பதினைந்து பேர் உயிரிழப்பு



(சென்னை)

ஆந்திராவில் கடும் பனிக்கு 15 பேர் பலியாகியுள்ளனர். ஆந்திராவின் வட மாவட்டங்களில் கடுங்குளிர் நிலவிவருகிறது. இம்மாநிலத்தில் கடந்த 2 நாட்களில் பனியின் தாக்கத்தினால் 15 பேர் பலியாகியுள்ளனர்.

மொத்தம் 23 மாவட்டங்களில் இந்தக் கடுங்குளிர் நிலவுவதால் நகரமெங்கும் பனிமூட்டம் நிறைந்து காணப்படுவதாகவும், குறிப்பாக இம்மாவட்டங்களில் 9 பாகைக்கும் குறைவாக வெப்பம் உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் பனியால், ஆந்திராவின் கரீம் மாவட்டத்தில் 5 பேரும், விசாகப்பட்டினம்,குண்டூர் ஆகிய மாவட்டங்களில்தலா 4 பேரும், வாராங்கல், நல்கொண்டா மாவட்டங்களில் மற்றும் சில மாவட்டங்களில் தலா ஒருவருக்கு என பனிக்குக் கடந்த இரு நாட்களில் 15 பேர் பலியாகியுள்ளனர்.

இதனால் சாலையோர மற்றும் பிளாட்பாரத்தில் வசிப்பவர்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு ஆநதிராவில் பனிப்பொலிவு காணபடுகிறது. இது போன்று பனிக்காலத்தினை இதுவரை சந்தித்ததில்லை என உள்ளூர்வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதே போன்று பக்கத்து மாநிலமான மகாராஷ்டிராவின் சில மாவட்டங்களிலும் பனியின் தாக்கம் உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியச் செய்திகள்

# குரங்குகளின் மரணத்திற்கு வருத்தம் தெரிவித்த அமைச்சர்



(புதுடில்லி)

மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் சென்ற கார் மோதியதில் 2 குரங்குகள் பலியாயின. 5 இறகும் மேற்பட்ட குரங்குகள் படுகாயமடைந்தன.

மத்தியபிரதேச மாநிலம் சியோனியில் நடைபெற இருந்த பஞ்ச்- சர்ப்பஞ்ச் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நாக்பூரிலிருந்து, மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் காரில் வந்து கொண்டிருந்தார்.

பஞ்ச்தார் ஆற்றுப்பாலத்தை கார் கடந்து சென்று கொண்டிருக்கும் போது குரங்குகள் கூட்டம் பாலத்தை எதிர்பாராத விதமாக கடந்தது.

அப்போது குரங்குகள் கூட்டத்தின் மீது கார் மோதியதில், சம்பவ இடத்திலேயே 2 குரங்குகள் பலியாயின. 5 இறகும் மேற்பட்ட குரங்குகள் படுகாயமடைந்தன.பின்னர் காரை நிறுத்தி அடிபட்ட குரங்குகளை அப்புறப்படுத்தி விட்டுச் சென்றார்கள் என்றும் குரங்குகளின் மரணத்திற்கு மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் வருத்தம் தெரிவித்துள்ளார் எனவும் தகவல் வெளியாகி உள்ளன.



இந்தியக் குடியரசுத் தினம் எதிர்வரும் 26 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளதை முன்னிட்டு, டில்லியில் என்.சி.சி.படை பிரிவினரின் அணிவகுப்பு மரியாதையை இராணுவ இணை அமைச்சர் பல்லம் ராஜு பார்வையிட்டார்.

# மத்திய அரசுக்கு எதிராக வழக்கு இராணுவத் தளபதிக்கு கட்டாய விடுமுறை



(புதுடில்லி)

மத்திய அரசுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த இராணுவத் தலைமை தளபதிக்குக் கட்டாய விடுமுறை அளிக்க மத்திய அரசு பரிசீலித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராணுவப் பணிக்காக சிங் எழுதிய மத்திய தேர்வாணைய தேர்வின் போது அவருடைய பிறந்த நாள் திகதி 1950 ஆம் ஆணடு என தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் இந்த ஆண்டு மே 31 இல் அவர் ஓய்வு பெறவேண்டும்.

ஆனா, சிங் தனது மெட்ரிகுலேசன் சான்றிதழில் உள்ள 1951 ஆம் ஆண்டு திகதி தான் சரியானது எனக்கூறி அதனையே தன்னுடைய பிறந்த ஆண்டாக கணக்கிலெடுக்க வேண்டுமென கோரினார். இதனை இராணுவ அமைச்சகம் நிராகரித்த நிலையில், அவர் உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார்.

இப்பிரச்சினையின் காரணமாக புதிய இராணுவ தலைமை தளபதியை நியமிப்பதில் மத்திய அரசுக்குச் சிக்கல் எழுந்துள்ளது. இதனால், சிங்கைக் கட்டாய விடுப்பில் செல்ல வைக்க மத்திய அரசு ஆலோசித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. வி.கே. சிங்கிற்கு அடுத்த அதிகாரியான கிழக்கு மண்டல இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பிக்ரம் சிங்கை அடுத்த இராணுவத் தலைமைத் தளபதியாக தேர்வு செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## மேற்கு வங்க மாநிலத்தில்

# சிகிச்சை பலனின்றி 7 குழந்தைகள் பலி



(சென்னை)

மேற்கு வங்க மாநிலத்தில் கடந்த இரண்டு திகதிகளுக்குள் ஏழு குழந்தைகள் பலியாகியுள்ளதால் குழந்தைகளின் பெற்றோர் கண்ணீர் பொங்க சோகத்தில் மூழ்கியுள்ளனர்.

மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள மால்டா மாவட்டத்தில் உள்ள அரச வைத்தியசாலையில் பல்வேறு சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டிருந்த பிறந்த மூன்று மணி நேர குழந்தை முதல் மூன்று வயதுக் குழந்தைகள் வரை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ள விடயம் அம்மாநிலத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து மேற்குவங்க மாநில சுகாதாரத்துறை அமைச்சர் சந்த்ரிமா பட்டாச்சார்யா, உயிரிழந்துள்ள ஏழு குழந்தைகளில் ஒரு குழந்தை மட்டுமே அரச வைத்தியசாலையில் பிறந்தது என்றும் மற்றக் குழந்தைகளின் நோய்கள் குறித்து பரிசோதனைக்காக வந்தவை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் பீகார், உத்தரகண்ட் போன்ற மாநிலங்களில் பிறக்கும் உடல் எடை குறைவான குழந்தைகள் இங்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு முன்பு, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் மால்டா வைத்தியசாலையில் எட்டு குழந்தைகள் பலியாயினர்.

கடந்த ஆண்டு 2011 ஒக்டோபர் மாதத்தில் பி.சி.ராய் வைத்தியசாலையில் 16 குழந்தைகளும், கடந்த யுன் மாதத்தில் பி.சி.ராய் மருத்துவமனையில் 18 குழந்தைகள் பலியாகி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சல்மான் ருஷ்டியைச் அடித்தால் ஒரு இலட்சம் பரிசு அறிவிப்பு



(புதுடில்லி)

சல்மான் ருஷ்டியைச் செருப்பால் அடிப்பவருக்கு ரூபா ஒரு இலட்சம் பரிசு வழங்கப்படும் என முஸ்லிம் அமைப்பு ஒன்று அறிவித்துள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் இம்மாத இறுதியில் நடைபெற இருக்கும் இலக்கிய மாநாட்டில் கலந்துகொள்ளவரும் சாத்தானிக் வெர்சஸ் என்ற நூலை எழுதி ஒட்டு மொத்த இஸ்லாமியர்களை இழிவு படுத்திய சல்மான் ருஷ்டியைச் செருப்பால் அடிப்பவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசும் அவருக்கான அனைத்து சட்ட உதவி களையும் செய்ய இருப்பதாக ராஜஸ்தான் முஸ்லிம் அமைப்பான ரஸா அககடமி தெரிவித்துள்ளது.

## தமிழக அரச கல்லூரிகளில்

# இலங்கை மாணவர்களுக்கு இலவச அனுமதி

(சென்னை)

தமிழக அரச பள்ளி, கல்லூரி விடுதிகளில் இலங்கை தமிழர்களின் மாணவ - மாணவிகள் சேர்க்கபடுவதற்கான விண்ணப்பம கட்டணம் இல்லாமல் விநியோகிக்கப்படுவதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து மதுரை மாவட்ட ஆளுநர் உ.சகாயம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

மதுரை மாவட்டத்தில் தமிழக அரசால் நடத்தப்பட்டு வரும் பாடசாலை கல்லூரிகளில் படிக்கும் மாணவ - மாணவிகளுக்காக பிற்படுத்தப்பட்ட, மற்றும் சீரமரபினர் விடுதிகள் செயறபட்டு வருகின்றன.

இந்த விடுதிகளில் சேருவதற்கு முகாம்களில் தங்கி உள்ள இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

பாடசாலைக ளில் 4 ஆவது வகுப்பு முதல் பிளஸ்-2 வரையிலும், கல்லூரிகளில் பட்ட, பட்டமேற்படிப்பு மற்றும் பாலிடெக்னிக் படிக்கும் மாணவ - மாணவிகள் விடுதிகளில் சேர தகுதி உடையவர்கள் ஆவார்கள்.

உணவு, உறைவிடம் இலவசமாக அளிக்கப்படும். 10 ஆவது வகுப்பு வரை படிக்கும் மாணவ-மாணவிகளுக்கு இரண்டு செட் பொலியஸ்டர் சீருடைகளும், 10 ஆவது மற்றும் பிளஸ்-2 படிப்பவர்களுக்கு சிறப்பு வழிகாட்டி புத்தகங்களும் இலவசமாக கிடைக்கும்.

# புதுச்சேரியில் பிரான்ஸ் அமைச்சர்

(சென்னை)

தானே புயலால் சேதம் அடைந்துள்ள பகுதிகளை பார்வையிடுவதற்காக பிரான்ஸ் நாட்டின் அமைச்சர் ஈடோவ்ரத் கோர்ட்டியல் இரண்டு நாள் பயணமாக இந்திய மாநிலம் புதுச்சேரிக்குச் சென்றுள் ளார்.

புதுச்சேரி மாநில முதல்வர் திரு.ரங்கசாமியின் வேண்டுகோளுக்கு இணங்க தானே புயலால் புதுச்சேரியில் ஏற்பட்டுள்ள சேதமதிப்புகளை நேரில் பார்வையிட்டு நிதியுதவி வழங்குவதற்காக பிரான்ஸ் அமைச்சர் ஈடோவ்ரத் வருகை தந்துள்ளதாக அரசு தரப்பு தெரிவித்துள்ளது.



# விபத்துக்குள்ளான கப்பல் கடலுக்குள் மூழ்கும் அபாயம்



இத்தாலியின் ரோம் நகரத்திற்கு அருகில் கடலில் பாறை மீது மோதி கவிழ்ந்த கோஸ்டா கான்கார்டியா என்ற கப்பல் கரைப்பகுதியில் இருந்து நழுவி கடலுக்குள் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ரோம் நகரத்திற்கு அருகில் உள்ள கிக்லியோ போர்டோ தீவுப் பகுதியில் பாறை மீது மோதி கோஸ்டா கான்கூர்டியா என்ற கப்பல் கவிழ்ந்தது.

இந்தக்கப்பலின் கப்டன் பிரான்சிஸ்கோ ஷெட்டினோ(வயது-52) மீது குற்றஞ் சுமத்தப்பட்டதால் அவரை வீட்டுக் காவலில் வைக்க வேண்டும் என ரோம் மஸ்ஜிஸ்ரேட் நீதிபதி உத்தரவிட்டார்.இந்நிலையில் பாறை அருகில் கவிழ்ந்துள்ள அக்கப்பல் தொடர்ந்து நழுவி கடல் பக்கமாகச் செல்வதாக, இத்தாலிய கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக மீட்புப்பணியில் இருந்த நீர் மூழ்கும் மற்றும் மலையேறும் வீரர்கள் உடனடியாக பணிகளை நிறுத்தியுள்ளனர்.

# ஈரானை அமெரிக்கா தாக்கினால் பாரிய அழிவுக்கு வழிவகுக்கும்

## –ரஷ்யா எச்சரிக்கை

“ஈரானை அமெரிக்கா தாக்கினால் அது மிகப் பெரிய அழிவுக்கு வழிவகுக்கும்” என ரஷ்ய வெளிவிவகாரத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரவ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவிக்கும்போது, மேற்கத்திய நாடுகள் தெஹ்ரானுடன் பேச்சுவார்த்தையைத் தொடர்வதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அதை விட்டுவிட்டு பயமுறுத்தல்களினாலோ தடைகளினால் நிலைமை மிகவும் மோசமாகிவிடும். போர் தொடுப்போம் எனக் கூறுவது ஏற்கனவே எரிந்து கொண்டிருக்கும் நெருப்பின் மீது எண்ணெயை ஊற்றுவது போலாகும். இவ்வாறு கூறுவதனால் ஏற்படும் பயங்கர விளைவுகள் எப்படி முடியும் என எனக்குத்தெரியாது என்று தெரிவித்தார். இதேவேளை, ஈரான் அணு ஆயுதங்கள் தயாரிப்பதை நிறுத்துவதற்கு தாக்குதல் நடத்தவும் தயங்க மாட்டோம் என அமெரிக்கா தெரிவித்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்புச் செயலர் பணி நீக்கம் விளக்கமளிக்குமாறு உத்தரவு



பாகிஸ்தான் பாதுகாப்புச் செயலரை பதவி நீக்கம் செய்தது குறித்து ஜனாதிபதி சர்தாரியும், பிரதமர் கிலானியும் விளக்கமளிக்க வேண்டுமென இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.பாகிஸ்தான் பாதுகாப்புச் செயலர் காலித் நயீம் லோதி சமீபத்தில் பதவி நீக்கம் செய்யப்பட்டார். தனது பதவி நீக்கத்தை ரத்துச் செய்ய வேண்டுமென லோதி இஸ்லாமாபாத் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார். இது குறித்த விசாரணை நீதிபதி ரியாஸ் கான் முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது, லோதியின் பதவி நீக்கம் செல்லாது என்று அறிவிக்கக் கோரி அவரதுசட்டத்தரணி வாதிட்டார். இதற்குப் பதிலளித்த நீதிபதி அரசுத் தரப்புக் கருத்தை அறியாமல் அவ்வாறான முடிவுக்கு வர இயலாது என்று தெரிவித்தார். மேலும் இவ்விவகாரம் குறித்து ஜனாதிபதி, பிரதமர், விரிவாக்கத் துறைச் செயலர் மற்றும் இப்போதைய பாதுகாப்புத்துறைச் செயலர் ஆகியோரின் கருத்துகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்படி உத்தரவிட்டார்.

முன்னதாக மெமோகாட் விவகாரத்தால் அரசுக்கும், இராணுவத்துக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் உருவாகும் வகையில் தவறான வகையில் நடந்து கொண்டதாகக் கூறி லோதியை பிரதமர் கிலானி பதவி நீக்கம் செய்தார், என்பது குறிப்பிடத்தக்கது.

# வெள்ளை மாளிகை மீது குண்டு வீச்சு பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

அமெரிக்காவில் நடத்தப்பட்ட போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு வெள்ளை மாளிகை முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது வெள்ளை மாளிகை மீது போராட்டக்காரர்கள் புகைக் குண்டு வீசியதைத் தொடர்ந்து வெள்ளை மாளிகை உடனடியாக தற்காலிகமாக மூடப்பட்டது. புகைக்குண்டு வீசப்பட்ட போது அதிபர் ஒபாமா மற்றும் அவரது குடும்பத்தினர் யாரும் உள்ளே இல்லை எனக் கூறப்படுகிறது. புகைக்குண்டு வெள்ளை மாளிகையிலுள்ள சுற்றுச்சுவரில் விழ்ந்ததனால் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிகிறது. அமெரிக்காவில் அதன் பொருளாதார நடவடிக்கைகளுக்கு எதிராக பல்வேறு நூதன போராட்டங்கள் நடந்து வருகின்றன.வால் தெரு ஆக்கிரமிப்பு என்று பெயரிடப்பட்ட போராட்டம் தற்போது வெவ்வேறு மாகாணங்களுக்கும் பரவி வருகிறது.

அமெரிக்கா உலகெங்கும் அதன் வல்லாதிக்கத்தை நிறுவ, தனக்கு எதிரான நாடுகள் மீது குண்டு வீசி தாக்கிவரும் நிலையில் வெள்ளை மாளிகை மீது அந்நாட்டு மக்களாளாலேயே புகைக்குண்டு வீசப்பட்டிருப்பது அமெரிக்காவுக்கு அதிர்ச்சியான செய்தியாகக் கருதப்படுகிறது.

# தற்கொலைத் தாக்குதல் ஆப்கானில் 15பேர் பலி



ஆப்கானிஸ்தானில் ஹெல்மண்ட் மாகாணத்தில உள்ள கஜாகி மாவட்டத்தில் நடைபெற்ற தற்கொலைப் படைத் தாக்குதலில் 7 பொலிஸாரும், பொதுமக்கள் 2 பேரும் பலியாகியுள்ளனர்.

கஜாகி மாவட்டத்தில் பொலிஸ் வாகனத்தின் மீது குறி வைத்து நடைபெற்ற இந்தத் தாக்குதலில் மேலும் 2 போலிஸாரும், பொதுமக்கள் 6 பேரும் காயம் அடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, மீண்டும் இரண்டு மணி நேரத்தில் நடி அலி மாவட்டத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு ஒன்று வெடித்ததில் உள்ளூர் புலனாய்வு அதிகாரி, இரண்டு மெய்க்காப்பாளர்கள் மற்றும் ஒருவர் பலியாகியுள்ளனர். இரண்டாவது தாக்குதலுக்கு தலிபான் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

# கொரிய விவகாரம் குறித்து முத்தரப்பு பேச்சுவார்த்தை

மியான்மர் மற்றும் கொரிய தீப கற்பத்தின் தற்போதைய நிலவரங்கள் உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து அமெரிக்கா, ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய மூன்று நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன.

இந்தப் பேச்சுவார்த்தை குறித்து அமெரிக்க வெளிவிவகார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கை பூில் கடந்த 2005ஆம் ஆண்டு செப் டெம்பர் மாதம் 19ஆம் திகதி நடந்த ஆறு நாடுகளின் கூட்டத்தில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் எடுக்கப்பட்ட முடிவுகளை அமுல்படுத்துவதில் மூன்று நாடுகளும் தாங்கள் உறுதியுடன் இருப்பதை வெளிப்படுத்தின எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பதிவிறக்கப் பெட்டகம்

ஜப்பானில் தங்கியிருந்த தமிழ்மகன் ஒருவர் சாப்பிடுவதற்காக ஒரு கடைக்குள் நுழைந்தார். கடைக்காரர் சிரித்தபடியே “ஒகாயோ ஒகசிமா” என்றார். ஜப்பானுக்குப் புதியவரான நம்மவர், ஜப்பானில் அவரவர் பெயரைச் சொல்லிக் கொள்வது வழககம் போலும் என்றெண்ணி, பதிலுக்கு “சின்னப்பு ஏகாம்பரம்” என்று புன்னகைத்துவிட்டு உள்ளே போனார். உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருந்த இவரது நண்பர், “ஏன்ரா உன்ரை பேரைச் சொலலிப்போட்டு வாறாய், அவன் சொன்னது அவங்கட பாஷையில காலை வணக்கம் எல்லோ” என்று சிரித்தான். நம்மவருக்கு உறுத்தலாகப் போய்விட்டது. அடுத்த நாளும் அதே கடைக்குச் சாப்பிட வந்தவர், இன்றைக்கு அவர்கள் பாஷையிலேயே காலை வணக்கம் சொல்லி அசத்திவிட எண்ணிக் கடைக்காரரைப் பார்ததவுடன், “ஒகாயோ ஒகசிமா” என்றார். பதிலுக்கு “சின்னப்பு ஏகாமபரம்” என்றார் கடைக்காரர்.

*** *** ***

ஒரு குரு அடிக்கடி கோபப்பட்டு தன்னுடைய சீடர்களைச் சபித்துக் கொண்டே இருந்தார். ஒரு சீடன் மட்டும் அவருடைய குணத்தை மாற்ற நினைத்தான். ஒருநாள் குரு அவனை, “நீ நரகத்துக்குத்தான் போவாய்” என்று சபித்தார்.

சீடன், “சரி குருவே… மகிழ்ச்சியுடன் போகிறேன்” என்றான். குருவுக்கோ வியப்பு தாங்கவில்லை.

“ஏன் நரகத்துக்குப் போகச் சம்மதிக்கிறாய்?” என்று கேட்டார்.

சீடன் சொன்னான்: “நல் வழி காட்ட வேண்டிய குரு, சீடர்களை நரகத்துக்குப் போ என்று சபித்தால் அவர் நிச்சயம் நரகத்துக்குத் தான் போவார். குரு இருக்கும் இடம்தான் எனக்குச் சொர்க்கம். அதனால்தான் நான் நரகத்துக்குப் போகச் சம்மதித்தேன்.”

*** *** ***

கணவன், மனைவி இருவரும் கிராமத்தில் உள்ள தங்கள் உறவினர்களைப் பார்க்க காரில் சென்று கொண்டிருந்தனர். வழியில் சேறும் சகதியுமாக இருந்த பாதையில் கார் மாட்டிக் கொண்டது. சேற்றிலிருந்து காரை எடுக்க முயற்சித்தபோது எதிரில் ஒரு விவசாயி மாடுகளுடன் வருவதைப் பார்த்தனர். இவர்கள் அருகில் வந்த விவசாயி சேற்றிலிருந்து காரை வெளியே எடுக்க 20 டொலர் கொடுத்தால் போதுமென்று கூறினான். இருவரும் ஒப்புக்கொள்ள சில நிமிடங்களில் கார் சேற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்டது.

“இன்று காலையிலிருந்து இந்த சேற்றில் சிக்கிக் கொண்ட கார்களை மீட்டுக் கொடுத்த வகையில் உங்களுடையது பத்தாவது கார்” என்று விவசாயி சொன்னான். சுற்றிலும் இருந்த வயல்வெளிகளைப் பார்த்த அவர்கள் “அப்படியானால் நீ உன்னுடைய வயலில் எப்போதுதான் வேலை செய்வாய்? இரவிலா?” என்று கேட்டனர்.

“இரவில் இந்தப் பள்ளத்தை தண்ணீர் ஊற்றி சேறாக்குவதற்கே நேரம் சரியாக இருக்கும்” என்றான் அவன்.

*** *** ***

ஹிட்லர் ஒரு பைத்தியக்கார விடுதியைப் பார்வையிடச் சென்றார். தலைவர் வருகிறார் என்பதால் பைத்தியங்கள் எல்லாம் ஒழுங்காக உடை உடுத்தப்பட்டு வரிசையாக நிற்க வைக்கப்பட்டிருந்தனர். மருத்துவ நிர்வாகம் கடும் சிரத்தை எடுத்துக் கொண்டு அவர்களை ஒழுங்குபடுத்தி வைத்திருந்தது. ஹிட்லர் அவர்களைப் பார்வையிட வந்தபோது ஒரே நேரத் தில் அனைவரும் கையுயர்த்தி அவருக்கு வணக்கம் சொன்னார்கள். பார்வையிட்டு வந்த ஹிட்லர் ஒரு நபர் மட்டும் வணக்கம் சொல்லாமல் நிற்பதைப் பார்த்து எரிச்சலுற்றார். “ஏன் வணக்கம் சொல்லவில்லை?” என உறுமினார். நடுங்கிய அந்த நபர் சொன்னார்: “மகாப்பிரபு– நான் ஒரு நேர்ஸ், பைத்தியமல்ல.”

*** *** ***

“ட்ரிங் ட்ரிங்”

“ஹலோ ரெயில்வே என்கொயரீஸ்”

“சொறி சேர் ரோங் நம்பர். இது வீடு”

“சொறி மேடம்”

“பரவாயில்லை என்னோட பேசுங்களேன்”

“உங்க குரல் செக்ஸியா இருக்கு”

“தாங்க்ஸ்”

“உங்களுக்குக் கல்யாணம் ஆச்சா?”

“யெஸ், பட் ஐ ஹேட் மை ஹஸ்பண்ட். உங்களுக்கு?”

“கல்யாணம் ஆச்சு, பட் ஐ ஹேட் மை வைஃப்”

“இஸ் இற்? உங்களைப் பார்க்கலாமா, வீட்டுக்கு வர்ரீங்களா?”

“இப்ப தனியாவா இருக்கிறீங்க?”

“யெஸ்”

“அட்ரஸ் சொல்லுங்க”

“நம்பர் ஆறு, மந்திரா நகர்…”

“மந்திரா நகரா! அடிப் பாவி நீயா?”

# செய்தி இணையத்தளங்களின் விதிமுறைகள் குறித்து அறிவிப்பு

(கொழும்பு)

இணையத்தளங்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் குறித்து தகவல் ஊடகத துறை அமைச்சு அறிவித்துள்ளது.

தகவல் ஊடகத்துறை அமைச்சு 27 இணையத்தளங்களுக்கு மாத்திரமே செயற்படுவதற்கான அனுமதிப்பத்திரத்தை இது வரையில் வழங்கியுள்ளது.

செய்திகளை வெளியிடும் இந்த இணையத்தளங்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து நேற்றுமுன்தினம் அறிவித்துள்ள தகவல் ஊடகத்துறை அமைச்சு, இதற்கமைய இணையத்தளங்கள் செயறபட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இணையத்தளங்களுக்கு பொறுப்பான ஆசிரியர்களும், ஊடகவியலாளர்களும் தாங்கள் வெளியிடும் செய்தித் தகவல்கள் நூற்றுக்கு நுறு வீதம் உண்மையானது என்பதை உறுதிப்படுத்த வேணடும்.

இணையத்தளத்தில் சேர்த்துக் கொள்ளும் படம் மாற்றி வடிவமைக்கப்படலாகாது.

இணையத்தளத்தின் ஆசிரியர் ஒரு தவறான செய்தியை வெளியிட்டோம் என்று தெரிந்து கொண்டால், அதைத் திருத்தி மீண்டும் செய்தியில் சேர்த்துக் கொண்டு இதனால் பாதிக்கப்பட்டவரிடம் மன்னிப்பும் கேட்க வேண்டும்.

ஒரு செய்தி தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் நிலைப்பாட்டை இணையத்தளத் திற்கு தெரிவிப்பதற்கு நியாய பூர்வமான சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டும். ஒருவரின் மதிப்பிற்கும், உணர் விற்கும், இரகசியத்தன்மைக்கும் ஏற்புடைய வகையில் இணையத்தளங்கள் நடந்து கொள்ள வேண்டும்.

சமூகப் பிரச்சினைகளைப் பொறுத்தவரை வன்முறைகள், கலவரங்கள், போதைப்பொருள் பாவனை, சித்திரவதை, மற்றவர்களை வேதனைப்படுத்தி இன்பம் காணுதல், பாலியல் ரீதியிலான தரக்குறைவான படங்களையும் தகவல்களை வெளியிடாமல் இணையத்தளங்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும்.

குற்றச்செயல்கள், பாலியல் ரீதியிலான குற்றச்செயல்கள், சிறுவயதினர் மீதான குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் சுமத்தப்படும் வழக்குகள் ஆகியவற்றை பொறுத்தவரை சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களை வெளியிடுவதை- குறிப்பாக 16 வயதிற்குட்பட்டவர்களின் பெயர்களைத் தவிர்க்க வேண்டும்.

ஒருவரின் இன,சாதி, மத, பால்நிலை அல்லது அவரின் வலதுகுறைந்த தன்மை, மனோநிலை பாதிப்பு போன்றவற்றை இணையத்தளத்தில் அறிவிப்பதும் தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

தற்கொலைச் சம்பவங்கள் பற்றி அறிவிக்கும்போது ஒருவர் எவ்விதம் தற்கொலை செய்து கொண்டார் போன்ற சம்பவங்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கை, குடும்பம், அவரது இல்லம், அவரது உடல்நிலை பற்றிய செய்திகளை வெளியிடுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

சிறுவயதினர் தங்கள் பாடசாலைக் காலத்தை மகிழ்ச்சியுடன் கழிப்பதற்கு அநாவசியமான இடையூறுகளை ஏற்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவானது தடை செய்த இணையத்தளங்கள் மற்றும் நீதிமன்றத்தின் உத்தரவின்படி தடை செய்யப்பட்ட இணையத்தளங்கள், தரங்குறைந்த பாலியல் உணர்வைத்தூண்டும் படங்களை பிரசுரிக்கும் இணையத்தளங்களுடன் எவ்வித தொடர்பும் இருக்கலாகாது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மாணவருக்கு அநீதி ஏற்படுவதை தடுப்பதற்கே இஸட் புள்ளி அமுல்

(கொழும்பு)

மாணவர்களுக்கு அநீதி ஏற்படுவதைத் தடுக்கவே "இஸட் ஸ்கோர்" முறை அமுல்படுத்தப்பட்டுள்ளதாக உயர கல்வியமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சில சமயங்களில் சில கேள்விப் பத்திரங்கள் மிகவும் இலகுவாக அமைந்து விடுகின்றன. சில சமயங்களில் கடின மாகவும் அமைந்துவிடுகின்றன. இது சிலருக்கு சார்பானதாகவும் சிலருக்கு சார்பற்றதாகவும் அமைந்து விடுகின்றது.

மற்றும் சிலர் பல்கலைக்கழகத்துக்கு நுழைந்துவிட வேண்டும் என்பதற்காக இலகுவான பாடங்களையே தெரிவு செய்கின்றனர். இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக ஒரு சாராருக்கு அநீதி ஏற்படுகின்றது. இந்த அநீதிகளைத் தடுக்கும் நடவடிக்கையாகவே "இஸட் ஸ்கோர்" முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதனால்தான் எவருக்கும் அநீதி ஏற்படாத வகையில் பல்கலைக் கழக அனுமதி கிடைக்கின்றது.

"இஸட் ஸ்கோர்" முறை நீக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கையை முன்வைத்துள்ளார். ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் 17 ஆயிரமாக இருந்த பல்கலைக்கழக அனுமதியை இ[illegible]து 22,000 ஆக அதிகரிக்கச் செய்து[illegible]ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 4 வருடம் கடமையாற்றினால் வருகிறது இடமாற்றம்



ஒரேஇடத்தில் தொடர்ந்து நான்கு வருடங்களுக்கு மேல் கடமையாற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கத் தீர்மானித்துள்ளதாக பொலிஸ் மாஅதிபர் என்.கே. இலங்க கோன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய சுமார் 10 பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரிகள் இடமாற்றம் செய்யபட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதற்கு முன்னரும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் 17 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதற்கமைய நான்கு வருடங்கள் தொடர்ச்சியாக ஒரே இடத்தில் சேவையாற்றிய பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரிகள் 30 பேருக்கு இடமாற்றம் வழங்க பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## இரும்பு ஏற்றிவந்த வாகனத்திலிருந்து வெடிபொருட்கள் மீட்கப்பட்டன

(கொழும்பு)

யுத்தம் இடம்பெற்ற பகுதிகளிலிருந்து பழைய இரும்புகளை ஏற்றி வந்த வாகனமொன்றிலிருந்து வெடி பொருட்களும் தற்கொலை அங்கியும் மீட்கப்பட்ட அதேவேளை, அவ் வாகனத்தில் பயணித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை பழைய இரும்புகளை ஏற்றிக்கொண்டு தென் பகுதி நோக்கிச் சென்ற வாகனத்தை, ஓமந்தை சோதனைச்சாவடியில் சோதனை செய்தபோது அவ்வாகனத்திலிருந்து 5 கிலோகிராம் சி - 4 ரக வெடி பொருட்களும் தற்கொலை அங்கியும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் ஓட்ட மாவடிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். கைதுசெய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கை மாத இறுதியில் ஒரு இலட்சமாகும்

### அமைச்சர் யாப்பா நம்பிக்கை

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல்மாதமான ஜனவரியில் உல்லாசப்பயணிகளின் வருகை ஒரு இலட்சமாக இருக்க வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த மாதத்தின் கடந்த 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 62 ஆயிரம் உல்லாசப்பயணிகள் வருகை தந்துள்ளனர். இதன்மூலம் உல்லாசப்பயணத்துறை 3 இலட்சத்து 93 ஆயிரத்து 865 அமெரிக்கன் டொலரை வருமானமாக ஈட்டியுள்ளது. அதிகரித்துள்ள உல்லாசப் பயணிகளின் வருகையை இந்த மாதம் முடிவடைவதற்குள் ஒரு இலட்சமாக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு "ஜேர்சி" இன மாடுகள் இறக்குமதி



(கொழும்பு)

நாட்டின் பால் உற்பத்தியில் தன்னிறைவு அடையச் செய்யும் நோக்குடன் அவுஸ்ரேலியாவிலிருந்து ஜேர்சி இனத்தைச் சேர்ந்த 290 இலட்சம் ரூபா பெறுமதியான 10 எருதுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் ஆலோசனைப்படி இறக்குமதி செய்யப்பட்ட எருதுகளின் மூலம் தலா ஒரு எருதிலிருந்து 75.000 விந்துக்கள் பெறப்பட உள்ளன. இதன் ஊடாக 10 எருதுகள் மொத்தமாக 750.000 ஜேர்சி கன்றுகள் கலப்பின இனப்பெருக்கத்தின் மூலம் 4-5 ஆண்டுகளில் இனவிருத்தி செய்யப்படவுள்ளன.

இச்செயற்பாடானது எதிர்காலத்தில் பாலுற்பத்தியில் இலங்கை தன்னிறைவடைவதற்கு தூண்டுகோலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுவாக அவுஸ்ரேலிய ஜேர்சி இன மாடுகள் இலங்கையின் காலநிலைக்கு மிகவும் பொருத்தமானதாகும். அதனாலேயே அங்கிருந்து மாடுகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இதன் பால் கறவையும் அதிகமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## இடம்பெயர்ந்த மாணவருக்கு உளப்பாங்கு சீர்திருத்தப் பயிற்சி

இடம்பெயர்ந்த மாணவர்களின் நலன்கருதி சமூக அபிவிருத்திக்கான உளப்பாங்கு சீர்திருத்த முகவர் பயிற்சிக் கருத்திட்டமொன்று அடுத்த வாரம் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை கிளிநொச்சி நகரை மையமாகக் கொண்டு இந்த சமூக பயிற்சிக் கருத்திட்டம் நடத்தப்படவுள்ளதாக சமூக அலுவல்கள் பணிப்பாளர் நந்தன விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கருத்துருவின் ஒருகட்டமாக மோதல் இடம்பெற்ற பகுதிகளிலும், கஷ்டப் பிரதேசங்களில் வாழும் சகல இன மாணவர்களும் நன்மை பெறும் விதத்தில் இந்தத் திட்டம் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, அநுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் ஏற்கனவே பயிற்சிக் கருத்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவு வலயத்திற்குள்ளான வருடாந்த ஆசிரியர் இடமாற்றம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்ற வலயத்திற்குள்ளான வருடாந்த ஆசிரியர் இடமாற்றசபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக, கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் செயற்படும்படியாக இடமாற்றம் வழங்கப்பட்ட 133 ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

*(நேற்றுமுன்தினத் தொடர்ச்சி...)*

திருமதி .வ.சிவரூபன் (கள்ளப்பாடு அ.த.க.), திருமதி பு.வில்வராசா (முல்லைத்தீவு ம.வி.), செல்வி. ச.சுஜிதா (உடுப்புக்களம் த.வி.),திருமதி. க.கவிதா (தண்ணீருற்று முஸ்லிம் வித்தி), திருமதி. சு.செல்வசாந்தன் (முல்லைத்தீவு றோ.க.), திருமதி. சி.கணேசலிங்கம் (செம்மலை ம.வி.), திருமதி வ.மகேந்திரன் (சிலாவத்தை. த.வி.), திருமதி. கோ.வீரசிங்கம் (சிலாவத்தை த.வி.), திருமதி சூ.நவசிங்கம் (முறிப்பு த.வி), திருமதி செ.கமலேஸ்வரன் (கொக்கிளாய் அ.த.க.), திருமதி க.சத்தியானந்தசிவம் (தண்ணீருற்று இ.த.க.), ந.ஸ்ரீகாந்தன் (கொக்கிளாய் அ.த.க.), திருமதி ல.அருள்வரதன் (குமுழமுனை ம.வி.), க.செந்தில்வேல் (தண்ணீருற்று முஸ்லிம் வித்தி), கி.அன்ரனி சுகிர்தன் (வெட்டுவாய்க்கால், அ.த.க.), கா.சுதாகரன் (வித்தியானந்தாக் கல்லூரி), த.மதியழகன் (செம்மலை ம.வி.), செல்வி சு.ரிசாந்தி (வள்ளிபுனம் க.உ.வி.), பொ.கதீசன் (கள்ளப்பாடு அ.த.க.), திருமதி சோ. ரகுநாதன் (அளம்பில் றோ.க.), திருமதி த.தயாளினி (முள்ளியவளை றோ.க.), திருமதி பு.சோமசேகரம் (கலைமகள் வித்தி), திருமதி க.பாலசிறீதரன் (முல்லைத்தீவு றோ.க). (முற்றும்)

# யாழ். போதனா வைத்தியசாலையில் புதிய கட்டடங்களின் தேவை அதிகரிப்பு

## வைத்தியசாலைப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் வைத்திய தாதிய விடுதிகள், நோயாளர் விடுதிகளின் தேவை அதிகரித்துக் காணப்படுவதாக யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் பழமையான கட்டடங்கள் உடைக்கப்பட்டு புதிய மாடிக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற போதும் அவற்றை விட மேலும் புதிய கட்டடங்களின் தேவை ஏற்பட்டுள்ளது.

வைத்திய தாதியர் விடுதிகள், குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு உள்ளிட்ட பிரிவுகளுக்கு கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டியிருக்கின்றது.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதற்கேற்ப வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் அதிகரிக்கப்படுகின்றது. மருத்துவ உபகரணங்களின் பெருக்கமும் அதிகரித்துள்ளது. இதனால் வைத்தியசாலைக்கான கட்டடங்களின் தேவையும் அதிகரித்துள்ளது.

தற்சமயம் ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் 4 மாடிக் கட்டடப் பணிகள் எதிர்வரும் டிசம்பர் மாதத்துடன் முடிவடையும். இருந்த போதும் மேலும் கட்டடங்கள் அமைக்கப்படவேண்டிய தேவையுள்ளது.

தற்சமயம் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு அமைந்திருக்கும் பகுதிகளை உடைத்து அப்பகுதியில் புதிய 4 மாடிக் கட்டடம் ஒன்றினை சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

# நீதிமன்ற ஆணையாளர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மேல்நீதிமன்ற ஆணையாளராகக் கடமையாற்றிய எஸ். பரமராசா நீதிச் சேவை ஆணைக் குழுவினால் யாழ். சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இதுவரை வவுனியா மேல்நீதிமன்ற ஆணையாளராகக் கடமையாற்றிய ஜே.விஸ்வநாதன் யாழ். மேல்நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (பா)

## முன்னாள் நீதிபதிகள்...

மற்றும் முன்னாள் பிரதம நீதியரசரான சி.என்.டிஎன்.சில்வா ஆகியோருக்கு மாதாந்தம் 38,000 ரூபா தவணைக் கட்டண அடிப்படையில் நீதி அமைச்சு மூன்று வாகனங்களை வழங்கியதாக குற்ற விசாரணை பிரிவினர் அறிக்கை ஒன்றை சமர்பித்து குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் இந்த மூன்று நீதிபதிகளும் ஓய்வு பெற்றபோது வாகனத்தை மீள வழங்காமையினால் வாகன நிறுவனத்திற்கு நீதி அமைச்சு 25 லட்சம் ரூபா செலுத்த வேண்டி ஏற்பட்டதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாகனத்தை திருப்பி அளிக்காமை சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் எனவும் இது தொடர்பில் விசாரணை நடத்தி அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குற்ற விசாரணை பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர். முன்வைக்கப்பட்ட கருத்துக்களை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதவான் ரஸ்மி சிங்கப்புலி, சம்பவம் தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை சமர்பிக்குமாறு குற்ற விசாரணை பிரிவுக்கு உத்தரவிட்டார்.

அதேவேளை இது தொடர்பில் ஆர்.வி.விக்னராஜாவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது தன்னிடம் எந்தவிதமான அரசாங்க சொத்துக்களும் தற்போது இல்லை எனவும் தாம் ஓய்வுபெற்ற வேளை எல்லாவற்றையும் மீளளித்து விட்டதாகவும் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

## தேசிய போஷாக்கு...

சமூகமாக எமது மாணவர்களை வளர்த்தெடுக்க வேண்டுமென்பதே ஜனாதிபதி அவர்களினது எதிர்பார்ப்பாகவும் உள்ளது. இதன் அடிப்படையில்தான் நிதித்துறை திறைசேரி யுனிசெப் உள்ளிட்ட ஏனைய துறைசார்ந்த திணைக்களங்களின் ஊடாக 2006 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியால் போஷாக்கு தேசிய நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் 2012 ஆம் ஆண்டில் இத் திட்டத்தினூடாக தரம் ஒன்று முதல் தரம் ஒன்பது வரை கல்வி கற்கும் 10 இலட்சம் மாணவர்கள் பயன்பெறவுள்ளனர்.

இந்நாட்டில் நிலவிய கொடிய யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலையில், தற்போது இங்கு நல்லதொரு எதிர்காலம் உருவாகியுள்ளதுடன் இலவச சீருடை இலவசக் கல்வி மற்றும் போஷாக்கு தேசிய நிகழ்ச்சித் திட்டம் என்பவை குறித்து உலகின் பல நாடுகளும் ஆச்சரியம் அடைந்துள்ளன.

நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போது, இந்தத் தேசிய போஷாக்கு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வறிய மாணவர்களின் கல்வி மட்டுமல்லாது அவர்களது ஆரோக்கியத்தையும் வளர்த்தெடுப்பதற்கு உதவியாக அமையும் என்பதுடன் அந்த வகையில் எமது மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளதாகவும் இத்திட்டத்தை சிறப்பானதாகவும் தரமுள்ளதாகவும் கொண்டு வருவதற்கு தாம் முழுமையான பங்களிப்பை வழங்கவுள்ளதாகவும் இதன்போது உறுதிபடத் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் வடக்கில் இத்திட்டத்தை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படுமெனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பாடசாலை அதிபர் சிவநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தேசிய போஷாக்கு நிகழ்ச்சித் திட்டம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதேவேளை சிவகுரு வித்தியாசாலையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் பாடசாலை சுகாதார மேம்பாட்டு இணையத்தளத்தையும் கல்வியமைச்சர் தொடக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் பிரேமதிலக்க, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க உள்ளிட்ட திணைக்களங்களின் துறை சார்ந்த அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (116,136)

## இனப்பிரச்சினைக்கு...

அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சிறுபான்மை மக்கள் பிரதிநிதிகளை செனற் சபையில் உள்வாங்குவதன் மூலம் ஜனநாயகத்தை பேணிப் பாதுகாக்க முடியும். நாடாளுமன்றில் தேசிய விவகாரங்கள் தொர்டர்பான அனைத்து தீர்மானங்களும் எடுக்கப்படும் வகையில் இந்த செனற் சபை உருவாக்கப்படும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் குறித்து அரசாங்கம் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்திவிட்டது.

அதுதொடர்பில் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தப்படும். உலகில் பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் சிறந்த ஜனநாயகம் நிலவுவதை எவரும் மறுக்கமுடியாதென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## கிளிநொச்சியில்...

நன்மை கருதி கிளிநொச்சி - அறிவியல் நகரில் யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் மற்றும் விவசாய பீடம் என்பன இயங்கவுள்ளன.

கடந்த வருடம் ஜூன் மாதம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொறியியல் பீடம் அமைக்க வசதி செய்து கொடுக்கப்படும் என உறுதியளித்திருந்தார்.

அந்த உறுதி மொழியை நிறைவேற்றும் முகமாகவே கிளிநொச்சியில் பொறியியல் பீடத்திற்கான கட்டத்தை புனரமைப்பு செய்ய 393.79 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

## வலிகாமம்...

கடத்தப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான கடத்தல்காரர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமுகமாகவே கடற்படையினர் வலி. மேற்கு கடற்கரையோரங்களில் மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளுக்கு சில கட்டுப்பாடுகளை விதித்து வருவதாகவும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக மீனவர்கள் கடற்றொழிலின் போது 40 குதிரைவலு வெளியிணைப்பு இயந்திரங்களைப் பாவிப்பதற்கு கடற்படையினர் அனுமதியளிக்க மறுத்து வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (பா)

## கல்வி...

வழங்கப்படும். மேலும் இளநிலை படிப்பிற்கு 120 இடங்களும், கணினி பொறியியல் படிப்பிற்கு 25 இடங்களும், முதுநிலை படிப்பிற்கு 50 இடங்களும், சுய நிதி திட்டத்தின் கீழுள்ளதற்கு 40 இடங்களுமாக இந்த திட்டம் மும்மடங்கில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது என கூறினார்.

2010 ஆம் ஆண்டு இந்திய பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஆரம்பித்து வைத்த இந்தியா - இலங்கை இடையேயான அறிவாற்றல் ஒப்பந்தத்தின் மற்றொரு முயற்சியே தற்போது அறிவித்துள்ள கல்வி உதவி என்பது குறிப்பிடத்தக்கது.

# சந்நிதியான் ஆச்சிரம திருவாசக விழா இன்று

(யாழ்ப்பாணம்)

செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் வருடாந்த திருவாசக விழா இன்று நடைபெறவுள்ளது.

செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறவுள்ள விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆலயத்திலிருந்து நால்வர் திருவுருவப் படமும், திருவாசக ஒடுகளும் திருவாசக பாராயணத்துடன் ஊர்வலமாக ஆச்சிரமத்திற்கு எடுத்துவரப்பட்டு நல்லை ஆதீன முதல்வரின் ஆசியுரையுடன் விழா ஆரம்பமாகும்.

மறவனூர் ரி.எம்.வாசகர் குழுவினரின் மங்கள இசையும், பேராசிரியர் அ.சண்முகதாஸின் சிறப்பு சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

# பகிரங்க கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உயர்கல்வியில் எதிர்நோக்கும் சமகால நெருக்கடிகளும், பல்கலைக்கழக புகுமுக மாணவர்களும் என்னும் தொனிப் பொருளில் பகிரங்கக் கலந்துரையாடல் ஒன்று இன்று பி.ப. 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீட பதில் பீடாதிபதி பேராசிரியர் ப.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் 2011 க.பொ.த உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகளும் இசட் புள்ளி கணிப்பீட்டு முறை என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கணித புள்ளி விபரவியல்துறை விரிவுரையாளர் கலாநிதி செ.அறிவழகனும், தனியார் பல்கலைக்கழக சட்டமூலம் என்னும் தலைப்பில் சட்டத்துறையைச் சேர்ந்த கு.குருபரனும் ஆரம்ப உரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

# நல்லூர் பிரதேச சபையினர் இன்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபை தவிசாளர் தலைமையில் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் இன்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

நுளம்புகள் பெருகும் வகையிலான இடங்களைக் கண்டறிந்து அங்கிருக்கும் கழிவுப் பொருட்களை உடனுக்குடன் வாகனங்களில் அகற்றுவதற்கு இவர்கள் தீர்மானித்துள்ளனர்.

சபைக்குரிய உழவு இயந்திரங்களை விட மேலதிமாக 5 உழவு இயந்திரங்களை இதற்காக பொதுமக்களிடமிருந்து சேவை அடிப்படையில் குப்பைகளை அகற்றுவதற்காக பிரதேச சபை பெற்றுக்கொண்டுள்ளது.

இன்று காலை ஆரம்பமாகும் நுளம்புகளை ஒழிக்கும் நடவடிக்கை மாலை வரை நீடிக்கும் என தவிசாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொக்குவில் அச்சுக்கூட வீதியில் நேற்று நுளம்புகளை ஒழிக்கும் வகையில் புகையூட்டல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

## அப்துல் கலாம்...

அவர்கள் மத்தியில் கருத்துரை வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் பங்குபற்ற யாழ்ப்பாணத்திலிருந்து கல்வியாளர் குழு ஒன்றும் கொழும்பு செல்லவுள்ளது குறிப்பிடத்தக்கது. இதேவேளை நாளை மறுதினம் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் நடைபெறும் இலங்கை விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், துறைசார் வல்லுனர்களுக்கான செயலமர்விலும் கலந்து கொள்ளும் அனுபவப் பகிர்வு நிகழ்வு ஒன்றும் இடம்பெறவுள்ளது.

2015 ஆம் ஆண்டில் இலங்கையின் உற்பத்தியை தற்போதிருக்கும் நிலையிலும் இரட்டிப்பாக்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் இலங்கையில் மேற்கொள்ளப்படும் உற்பத்தியில் நவீன விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உச்ச திறன்கொண்ட உற்பத்தியை அதிகரித்து, ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்வது பற்றி அப்துல் கலாமுடன் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

## யாழ். வர்த்தகக்....

நிறுவனங்கள் பங்கேற்கவிருப்பதாக அவர்கள் கூறினர்.

யாழ்.மாவட்டம் மிக விரைவில் உலக வர்த்தகத்தில் ஒரு நிலையான இடத்தைப் பிடிக்கும் என்பதால் ஏராளமான வர்த்தக நிறுவனங்கள் தமது காட்சிக் கூடங்களை இந்தக் கண்காட்சியில் அமைக்கும் வேலைகளில் நேற்று மாலை வரை தீவிரமாக ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. இக்கண்காட்சியில் கட்டடப் பொருட்கள், நிர்மாண மற்றும் உள்ளக அலங்காரப் பொருட்கள், பதனிடப்பட்ட உணவு, விவசாயப் பண்டங்கள், குடிபானங்கள், பொதியாக்கம், இயந்திரங்கள், ஒப்பனை மற்றும் அழகியல் சாதனங்கள்,. மின்சார உபகரணங்கள், இலத்திரனியல் பொருள்கள், உடுபுடவைகள், அன்பளிப்புப் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள், கைவினைப் பொருட்கள், கனரக இயந்திர சாதனங்கள், சுகாதார நலப் பொருட்கள், கைத்தொழில் உபகரணங்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் உட்பட பல்வேறு வகையான பொருள்கள் கண்காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்படவிருப்பதாக ஏற்பாட்டாளர்கள் கூறினர்.

வடக்கின் தொழில்துறை அபிவிருத்தியில் ஒரு மைல் கல்லாக விளங்கும் இந்த வர்த்தகக் கண்காட்சி மூலம் வடபகுதிக்கும், இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்கும் இடையில் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்துவதே இதன் நோக்கம் என அவர்கள் தெரிவித்தனர். இந்தக் கண்காட்சியின் மூலம் உள்ளூர் தொழில் முயற்சியாளர்கள் பல்வேறு பயன்களைப் பெற முடிவதுடன், அவர்களுக்கான தொழில் ஊக்குவிப்பு கடன் உதவிகளும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக யாழ். வர்த்தக தொழில்துறை சம்மேளன தலைவர் பூரணச்சந்திரன் தெரிவித்தார்.

இன்றும் நாளையும் கொழும்பு அக்னி இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியும் துரையப்பா விளையாட்டரங்களில் நடைபெற ஏற்பாடாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# வடபகுதி பாடசாலைகளுக்கு 500 மில். பெறுமதியில் கணினிகள்



வடபகுதிப் பாடசாலைகளுக்குக்கடந்த ஆண்டு விசேட செயற திட்டத்தின் மூலமாக ஐந்நூறு மில்லியன் ரூபா பெறுமதியான கணினிகளும் விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநருக்கும் கல்வியியலாளர்களுக்குமான சந்திப்பு நேற்று மாலை 3.00 மணியளவில் யாழ். வேம்படி மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்ட வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், வடமாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள், மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் அவர்களும் கலந்துகொண்டு அதிபர்கள், அதிகாரிகளுடன் 2012 ஆம் ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டு ஆலோசனைகள் பல ஆளுநரினால் அதிபர்களுக்கும், அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டது.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் தனது தலைமையுரையில் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளின் பௌதிக வளம், ஆசிரியர் வளம் என்பன சமன் செய்யப்பட்டுத் தரமான கல்வி முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது.

அரசாங்க இடமாற்றக்கொள்கைகளுக்கு ஏற்ப ஆசிரியர் இடமாற்றங்கள் செய்யப்படல் வேணடும் என்றும், வடமாகாணப் பாடசாலைகள் பல தேசிய நிலைப் போட்டிகளில் வெற்றிபெற்றுச் சாதனை படைத்துள்ளது என்றும தெரிவித்தார்.

கடந்த க.பொ.த. உயர்தரப் பெறுபேற்றில் முதல் 10 இடங்களில் 07 இடங்கள் வடமாகாணம பெற்றதுடன் கணிதப் பிரிவில் தேசிய நிலையில் வடமராட்சி உடுப்பிட்டிப் பாடசாலை தேசிய ரீதியில் முதலாம் இடத்தையும், யாழ். பரியோவான் மாணவன் விஞ்ஞானப் பிரிவில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றது பெருமைக்குரிய விடயம என்றும் கூறினார்.

வடமாகாணக் கல்வி அமைச்சின செயலாளர், சத்தியசீலன் ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் ஆகியோரும் வடமாகாணக் கல்வி அபிவிருத்தி தொடர்பாக உரையாற்றினர். கௌரவ ஆளுநர் உரையாற்றுகையில் இயலுமானவரை யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் ஆசிரியர் வளம் சமமாகப் பங்கிடவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இடமாற்ற சபையின் முடிவே இறுதியான முடிவாகக்கொள்ளப்படுவதுடன் தொழிற்சங்கங்களின் சம்மதமும் பெறப்படுகிறது என்றார். தவறான கருத்துக்களை யார் வெளிப்படுத்தினாலும் அது பொறுப்பற்ற செயல் எனத் தெரிவித்தார். உங்களுக்கு வெளியாரிடம் இருந்து கிடைக்கும் உதவிகள் மாகாணக்கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் பெற்றுச் சரியான பதிவுகளுடன் வெளிப்படைத் தன்மையுடன் செலவைச் செய்து பாடசாலையை வளப்படுத்துவதற்கு எந்தத் தடையுமில்லை எனத் தெரிவித்தார். (136)



க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தேசிய ரீதியில் விஞ்ஞானப் பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட யாழ். பரியோவான கல்லூரி மாணவன் சஞ்சேஜனுக்கும் கல்வியமைச்சர் மடிக்கணினிகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது கணிதப் பிரிவில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற உடுப்பிட்டி அமெரிக்க மிசன் பாடசாலை மாணவன் கமலவாசனுக்கும் வழங்கிக் கௌரவித்தார்.

# வைத்தியர்கள் இன்று பணிப் புறக்கணிப்பு

(கொழும்பு)

இலங்கை தேசிய வைத்திய சாலையைச் சேர்ந்த 1200 வைத்தியர்கள இன்று பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர். இலங்கை மருத்துவ கவுன்ஸில் உறுப்பினர்கள் இருவரை நியமனம செய்தமைக்கு எதிராகவும் போக்குவரத்திற்கான மேலதிக சம்பளம் மற்றும் பிரச்சினையான தருணத்தில் கடமைக்கு சமுகமளிப்பதற்கான சம்பளம் அரசாங்கத்தினால் வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துமே இந்த பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இன்று காலை 8 மணியிலிருந்து நாளை காலை 8 மணி வரை வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கைக்கு மேற்கொள்ளவுள்ளனர். பணிப்புறக்கணிப்பு நடவடிக்கைக்கு மத்தியிலும் அவசர சிகிச்சைப் பிரிவு செயற்படுமெனவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# கேட்பதைக் கொடுக்க அரசால் முடியாது

நீர், மின், எரிபொருள்துறை தொழிற்சங்கங்கள் கோருவது போல 45% சம்பள உயர்வை வழங்கமுடியாது என அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். மின் சாரசபை, நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கங்களுக்கு 25% சதவீத சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த சம்பள உயர்வை மேலும் அதிகரிக்குமாறு தொழிற்சங்கங்கள் கோருவதால் பல சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் தொழிற்சங்கங்கள் கோரும் 45% சம்பள உயர்வை அரசாங்கத்தால் வழங்க முடியாது என கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் கெஹலிய தெரிவித்தார்.

# ஊழியர் சேமலாப நிதி திருத்திய சட்டமூலம் சபையில்

(கொழும்பு)

திருத்தம் செய்யப்பட்ட ஊழியர் சேமலாப நிதிச் சட்டமூல ஆவணம் நேற்று முன்தினம் அவை முதல்வர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் நாடாளுமன்றில் சமர்பிக்கப்பட்டது. அதன் மீதான விவாதம் இப்போது இடம்பெற்று வருகிறது. இந்த சட்டமூல ஆவணம் இதற்கு முன்னர் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்போது எதிர்க்கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து வாபஸ் பெறப்பட்டது. எதிர்கட்சிகள் சுட்டிக்காட்டிய அம்சங்களில் இரு திருத்தங்கள் செய்யப்பட்டு நாடாளுமன்றில் இச்சட்டமூல ஆவணம் சமர்ப்பிககப்பட்டுள்ளது.

# ராஜினாமா தீர்மானம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபை உறுபபினர் பதவியிலிருந்து ராஜினாமா செய்யும் தீர்மானத்தை தான் ஒத்திவைத்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த அஸாத் சாலி நேற்று தெரிவித்தார். ஜனாதிபதி கோரியதற்கிணங்கவும் தான் சபையில் அங்கம் வகிக்க வேண்டிய முக்கிய உறுப்பினர் என மேயர் ஏ.ஜே.எம். முஸம்மில் கூறியதற்கிணங்கவும் ராஜினாமா தீர்மானத்தை தான் ஒத்திவைத்தாக அஸாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபையில் நேற்று விசேட உரையொன்றை



நிகழ்த்தும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஜனவரி 19 ஆம் திகதி தான் ராஜினாமா செய்யப் போவதாக அஸாத் சாலி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் நெல் அறுவடை ஆரம்பம்



திருகோணமலை மாவட்டத்தில் இவ்வருடத்திற்கான பெரும்போக நெல் அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தம்பலகாமம், கந்தளாய் மூதூர், கிண்ணியா, சேருவல ஆகிய கமநல பிரிவுகளைச் சேர்ந்த 42 ஆயிரம் ஹெக்டயர் நிலபரப்பில் இவ்வருடத்தில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கடந்த பெரும்போக நெற்செய்கை வெள்ள அனர்த்தம் காரணமாக இப்பிரதேசங்களில் வெகுவாக பாதிக்கப்பட்டிருந்தன. திருகோணமலை மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் அறுவடை எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பிரதேசத்தில் ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 25-30 மூடைகள் விளைச்சலைக் கொடுத்துள்ளது.

# சோமாலியாவுக்கு அரிசி தானம்

(கொழும்பு)

உணவுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ள சோமாலியாவுக்கு சுமார் 7500 மெற்றிக் தொன் அரிசியைத் தானமாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதோடு அதற்கு அமைச்சரவை அனுமதியும் கிடைத்துள்ளதாக கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று காலை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது-

ஏற்றுமதிக்கான அரசி பெற்றுக்கொள்வதற்காக அம்பாறை மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் இருந்து 15000 மெற்றிக்தொன் நெல் பெறப்படும். இதேவேளை 2011-2012 பெரும்போகத்தில் ஒரு இலட்சம் மெற்றிக்தொன் நெல்லை களஞ்சியப்படுத்த வசதிகள் இருப்பதாக நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார் என அமைச்சர் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் 10 விக்கெட்டுக்களால் வெற்றி



டுபாயில் நடைபெற்ற இப்போட்டி மூன்று நாட்களில் முடிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியின் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 192 ஓட்டங்களையும் பாகிஸ்தான அணி 338 ஓட்டங்களையும் பெற்றன.

போட்டியின் மூன்றாவது நாளான நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 160 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. அவ்வணியின் சார்பில் ஒருவரும் அரைச்சதத்தையும் பெறவில்லை. அதிகபட்சமாக ஜொனதன் ட்ரொட் 49 ஓட்டங்களைப் பெற்றார். அவ்வணியின் 6 வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களில் உமர்குல் 63 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார. அப்துர் ரஹ்மான் 37 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் சயீட் அஜ்மல் 42 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். பாகிஸ்தான் அணி வெற்றி பெறுவதற்கு இரண்டாவது இன்னிங்ஸில் 15 ஓட்டங்கள் மாத்திரமே தேவைப்பட்டன. அந்த இலக்கை 3.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி அடைந்தது பாகிஸ்தான் அணி. சயீட் அஜ்மல் போட்டியின் சிறப்பாட்டக்காரராக தெரிவானார்.

# இலங்கை மாணவன் இந்தியாவில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்பு



இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தின் போபால் நகரிலுள்ள மௌலானா ஆஸாத் தேசிய பொறியியல் நிறுவகத்தில் கல்வி கற்றுவந்த இலங்கை மாணவர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டதாக இந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர். 20 வயதான இம்மாணவர் பொறியியல் இளமாணி கற்கை நெறியைப் பின்பற்றி வந்தார். சம்பவம் பற்றி கம்லா நகர் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி கே.எஸ்.பதோரியா இம்மாணவர் தனது அறைக்குள் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார். அறை உட்புறமாக பூட்டப்பட்டிருந்தது தற்கொலைக் குறிப்பு எதுவும் காணப்படவில்லை எனத் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஜனவரி 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.